# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :167 சித்திரை 30ஆம் நாள் புதன்கிழமை 13 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051


# நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே தேர்தல் திகதி தீர்மானிப்பு!

- ஜூன் 20 நடப்பது சந்தேகமே!
- விருப்பு இலக்கங்களும் வெளிவராது
- தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முடிவு



யாழ்ப்பாணம், மே 13

தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் எதிர்வரும் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. அதன் முடிவுகளை அறிந்த பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடி நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிக்கும் என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னர் அறிவித்தவாறு ஜூன் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறாது என்றும் அது பிற்போடப்படவேண்டும் என்றும் ஆணைக்குழு கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. 02

## தென்னைச் செய்கை வடக்கில் வெற்றி

அமைச்சரின் கண்டுபிடிப்பு இது!

கொழும்பு, மே 13

வடக்கு மாகாணத்தில் பளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் தென்னைச் செய்கை வெற்றியளித்துள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில், ஏற்றுமதி விவசாய அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண 12

## கொரோனா 884

- மேலும் 21 பேர் அடையாளம்
- 366 பேர் குணமடைவு
- 509 பேர் சிகிச்சையில்
- 117 பேர் கண்காணிப்பில்

கொழும்பு, மே 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்துக் 14

## கடற்படையினர் 444 பேருக்கு கொரோனா!

52 பேர் குணமடைவு

கொழும்பு, மே 13

இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 444 பேர் கடற்படையினர் என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார். இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி 02

## கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி வெட்டிக்குப் போட்டி!

அரசியல் கைதிகளின் பட்டியல் மஹிந்தவிடம் நேற்றுச் சமர்ப்பிப்பு



"ஆர் குத்தியெண்டாலும் அரிசியானால் சரி என்டுற மாதிரி ஆர் பட்டியல் குடுத்தெண்டாலும் அரசியல் கைதிகள் வெளியில் வந்தால் சரி கண்டியளோ!..."

கொழும்பு, மே 13

அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்தவுடன், கூட்டமைப்பினர் நேற்று இரவு சந்திக்க இருந்த நிலையில், 02

## போதைப்பொருள் விற்பனை

## கடலில் குதித்து நீந்தி தப்பமுயன்ற இளைஞன்!

மண்டைதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 13

பொலிஸ் கைதுசெய்ய முற்பட்டதால், பண்ணைக் கடலுக்குள் குதித்து நீந்தி தப்பிக்க முற்பட்டார் என்று கூறப்படும் இளைஞனைக் கடற்படையினர் மீட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியில் மண்டைதீவுச் சந்திக்கு அண்மையில் நேற்றுமாலை இடம்பெற 02

## சாராயக் கோட்டை பிடிபட்டது புத்தூரில்

நேற்றும் 100 போத்தல் மீட்பு

யாழ்ப்பாணம், மே 13

புத்தூரில் குப்பை மற்றும் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றும் 100 சாராயப்போத்தல்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பிரிவினர் புலன்விசா 02

## சர்வமும் இராணுவமயம்

கொழும்பு, மே 13

இரண்டு அமைச்சுக்களின் செயலர்களாக ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நியமித்ததைத் தொடர்ந்து இலங்கையின் சிவில் சேவைக் 02

## சகலருக்குமே டிஜிட்டல் அடையாள அட்டை!

ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே 13

தனித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் அடையாள அட்டைகளை சகலருக்கும் மிகவிரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அவருடைய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந் 12

## இராணுவத்திலும் விவசாயப் பிரிவு

ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, மே 13

இராணுவத்தில் விவசாயப் பிரிவொன்றை நிறுவி, பயிர்ச் செய்கைக்கு அந்தப் பிரிவின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள் 14

## தனக்கிருந்த நற்பெயரை நாறடித்து விட்டாராம் ஹூல்

இப்படிச் சொல்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், மே 13

கொரோனாவால் வீட்டுக்குள் முடங்கி இருக்கும் மக்களுக்கு அரசுவழங்கிய நிவாரணத்தில் தலையிட்டு தனது ஆதரவாளர்களுக்கு வழங்கினார் என்று உண்மைக்குப் புறம்பான, அடிப்படை ஆதாரங்களற்ற தகவலை ஊடகங்களுக்குத் தெரிவித்து தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தினார் என்றுகூறி பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலிடமிருந்து 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி தனது சட்டத்தரணியூடாக முன் 02

## சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு தேர்தலில் முடிவு கட்டுவர் மக்கள்

சஜித் திட்டவட்டம்

கொழும்பு, மே 13

"கொரோனா அபாயத்துக்குள் நாடு சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் ராஜபக் ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சி தொடர்கின்றது. இந்தக் கொடூர ஆட்சிக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டி முடிவு கட்டுவர்." 14

## நீதிமன்ற...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்களான அபயசேகர, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை எதிர்வரும் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. வழக்குகள் தொடர்பில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரான ஒரு நாளில் ஆணைக்குழு மீண்டும் கூடி ஆராயும்.

அப்போது தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். அதேநேரம் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதி வெளியிடுவதென முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த போதும், நீதிமன்ற நடவடிக்கையின் பின்னரே அதை வெளியிட நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரைக்கு ஆகக் குறைந்தது 35 நாள்கள் வழங்கப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாட்டுக்கு அமைவாக, மே 15ஆம் திகதி விருப்பு இலக்கங்களை வழங்க முடியாவிட்டால் ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

## கூட்டமைப்பு...

திடீரென முந்திக் கொண்டு ஈ.பி.டி.பியினர் பிரதமர் மஹிந்தவைச் சந்தித்தனர். ஆனாலும் திட்டமிட்டவாறு கூட்டமைப்பின் சந்திப்பு நேற்று இரவு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்றார்.

கடந்த 4ஆம் திகதி மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவரின் இல்லத்தில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களைக் கூட்டமைப்பினரிடம் பிரதமர் கேட்டறிந்தார். முழுமையான விவரங்களைத் தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும் கேட்டிருந்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் முழு விவரங்களும் உறுதி செய்யப்பட்டு முழுமையான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்திப்பொன்றில் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதன்போது கூட்டமைப்பினருடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை ஜனாதிபதியிடம் பிரதமர் தெரிவித்துள்ளார். இதையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை கூட்டமைப்பினரிடம் இருந்து வாங்கித் தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரதமரிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நேற்று முன்தினம் தொடர்புகொண்ட பிரதமர், நேற்றிரவு 7.30 மணியளவில் தம்மைச் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியலை ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார்.

அதற்கமைய அந்தப் பட்டியலை கொழும்பிலிருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்றுக் காலை அனுப்பி வைத்தார். அதைப் பிரதமரிடம் நேற்றிரவு நேரில் கையளிக்குமாறும் சுமந்திரனிடம் மாவை தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் நேற்று மாலை கூட்டமைப்பை முந்திக்கொண்டு பிரதமரை அவரின் வீட்டில் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியினர் தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்தநிலையில், திட்டமிட்டவாறு நேற்றிரவு 7.30 மணியளவில் பிரதமரை அவரின் வீட்டில் சந்தித்த கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா அனுப்பியிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலைக் கையளித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் சுமந்திரன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில், இந்த கைதிகளுள் வழக்குகள் முடிவுக்கு வந்தவர்கள் தொடர்பில் தான் ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் சுமந்திரனையும் ஜனாதிபதியுடன் நேரடியாக பேசுமாறும் கேட்டுக்கொண்ட பிரதமர் ஏனையோர் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை தான் மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் சுமந்திரனோடு கலந்துரையாடிய பிரதமர், தாம் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை முன்னெடுக்க உள்ளதாகவும் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் அவரும் இதனை உறுதி செய்துள்ளதனையும் சுட்டிக்காட்டினார். புதிய நாடாளுமன்றம் கூடுகின்றபோது இது தொடர்பிலான நடவடிக்கைகளை தாம் ஆரம்பிக்கின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இந்த முயற்சிகளிற்கு அத்தியாவசியமாகும் எனவும் பிரதமர் வலியுறுத்தினார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கி ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெறுகின்றபோது அத்தகைய நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு நிச்சயம் இருக்கும் என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் உள்ள தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதன் அவசியத்தினையையும் வலியுறுத்தினார், என்றார். (ஒ,5,22)

## சாராயக்...

ரணை நடத்தி காற்போத்தல் கொள்ளளவுடைய 100 போத்தல்களை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவை உரப்பையினுள் வைத்து நிலத்தில் குழிவெட்டி மறைத்தும் குப்பைக்குள்ளும் வைத்திருந்த நிலையில் பொலிஸார் அந்த வீட்டில் சோதனை நடத்தி அவற்றை மீட்டனர். அந்த வீட்டுக்காரரையும் கைதுசெய்தனர்.

அவர் சட்டநடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். இதேவேளை, நேற்றுமுன்தினமும் புத்தூரில் காற்போத்தல் கொள்ளளவுடைய 200 போத்தல்கள் மற்றும் 2 டசின் பியர்ரின்கள் என்பனவற்றை விசேட பொலிஸ் பிரிவினர் மீட்டிருந்தனர். அந்த வீட்டிலிருந்த நபரும் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

## சர்வமும்...

குள் நியமிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது.

கோத்தாபய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் இதுவரை சிவில் நிர்வாகத்துக்குள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்ட படையதிகாரிகள் விவரம் வருமாறு:

மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன: தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா: உறுப்பினர், பொருளாதர புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி, இராணுவத் தளபதி, கொரோனா ஒழிப்புச் செயலணி.

மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல: பிரதானி, ஜனாதிபதி செயலகம்.

மேஜர் ஜெனரல் கருணாரத்ன எகோடவேலா : தலைவர், கொரோனா சுகாதார பராமரிப்பு சமூக பாதுகாப்பு நிதியம்.

அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ்: மேலதிக செயலர், ஜனாதிபதி செயலகம்.

மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க: தலைவர், துறைமுக அதிகாரசபை.

மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்ச்சி: பணிப்பாளர் நாயகம், பல்நோக்கு அபிவிருத்தி செயலணி.

மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா: தலைவர், வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு செயலணி.

மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ்: தலைவர், தேசிய புலனாய்வு பணியகம்.

மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்ரியா: பணிப்பாளர், சுங்க திணைக்களம்.

மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி: தலைவர், இலங்கை புனர்வாழ்வு ஆணைக்குழு.

யாப்பா சேனாதிபதி: ஜனாதிபதி செயலகம்.

மேஜர் ஜெனரல் சந்திரசிறி : தலைவர், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை.

பிரிகேடியர் துவான் சுரேஷ் சல்லே: தலைவர், இலங்கை புலனாய்வு நிறுவனம்.

ஏ.எஸ்.பி. பிரசன்னா டி அல்விஸ்: பணிப்பாளர், தீவிரவாத விசாரணை பணியகம்.

மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக: தலைவர், நுகர்வோர் அதிகார சபை.

சீ.டீ. விக்ரமரத்ன : உறுப்பினர், பொருளாதார புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ்: உறுப்பினர், பொருளாதார புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

மேஜர் ஜெனரல் சுதன்த ரணசிங்க: உறுப்பினர், பொருளாதார புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

ஏர் மார்ஷல் ரொஷான் குணதிலக: ஆளுநர் , மேல் மாகாணம்.

மேஜர் ஜெனரல் எம். ஆர். டபிள்யு. சொய்ஸா: தலைவர், .காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்.

மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க: செயலாளர், சுகாதார அமைச்சு. (ஒ,5)

## கடலில்...

றது.

சிறுவர்களுக்கு போதை மாத்திரைகளை விநியோகித்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் அந்த இளைஞனைப் பொலிஸார் கைதுசெய்யமுற்பட்டனர். அதன்போதே அவர் கடலுக்குள் பாய்ந்து தப்பிக்க முயற்சித்துள்ளான். எனினும், கடற்படையினர் விரைந்து செயற்பட்டு நீண்ட தூரம் நீந்திச் சென்று இளைஞனைப் பிடித்து வந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேலணை வெள்ளைக்கடற்கரை (சாட்டி) பள்ளிவாசல் பகுதியில் வசிக்கும் 18 வயதுடையவரே அவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

அவர், வேலணைப் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கு போதை மாத்திரைகளை வழங்குகின்றார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தனுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்குசென்று கைதுசெய்யமுற்பட்டபோதே பண்ணைக் கடலுக்குள் பாய்ந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-111)

## கடற்படையினர்...

மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த மேலும் 19 கடற்படையினர் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அவர்களில் 14 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையிலும், இருவர் முல்லேரியா ஆதார மருத்துவமனையிலும், இருவர் ஹோமாகம ஆதார மருத்துவமனையிலும், மற்றுமொருவர் வெலிகந்தை ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களில் 19 பேர் உட்பட, இதுவரை 52 கடற்படையினர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் கடற்படையின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## தனக்கிருந்த...

னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கடிதம் அனுப்பியுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் காலத்தில் திட்டமிட்ட விசமப் பரப்புரையாக தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன உறுப்பினர் ஒருவர் செயற்பட்டமை திட்டமிட்டே நடந்தது. கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை வலிந்து சந்தித்த பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், பேரிடர் முகாமைத்துவ நிலையத்தால் வழங்கப்பட்ட நிவாரணத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலர், அங்கஜன் இராமநாதனிடம் கொடுத்தார், என அரசியல்வாதிகளும், வேட்பாளர்களும் தேர்தல் விதிகளை மீறி தமது அரசியல் நோக்கத்துக்காகச் செயற்படுகிறார் எனவும் தெரிவித்திருந்தார்.

பொதுமக்களுக்காக வழங்கப்பட்ட பொருள்கள் எவற்றையும் யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடமிருந்து அங்கஜன் இராமநாதன் பெறவில்லை. இதை மறுதினமே யாழ்ப்பாண மாவட்ட செயலரே மறுத்திருந்தார். இந்த அப்பட்டமான பொய்யால் தேர்தல் நெருங்கும் இந்தக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் நின்று பணியாற்றும் அவருடைய நற்பெயருக்கு வேண்டுமென்றே களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு கிழமைகளுக்குள் பதிலளிக்காவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் இதுதொடர்பில் அங்கஜன் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஒ.5)

# இராணுவ ஆட்சியா? மறுக்கிறது அரசு!

கொழும்பு, மே 13

**இராணுவத் தளபதிமாரை ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சித்து இரண்டு தடவைகளும் தோல்வி கண்டவர்களே இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ராணுவ ஆட்சியை நோக்கிப் பயணிக்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர் என்று அமைச்சர் டளஸ் அழகப் பெரும தெரிவித்தார்.**



முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளுக்கு அரச கட்டமைப்பில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. சுகாதார அமைச்சின் செயலர் பதவிக்கு கூட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நாடு இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனவே என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இப்படியான கருத்துகளை சமூக வலைத்தளங்களில் உருவாக்கும் நபர்கள் யார்? இராணுவத் தளபதியாக இருந்தவர்களை ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சித்து, இரண்டு தடவைகளும் தோல்வி கண்டவர்களே இதன் பின்னணியில் செயற்படுகின்றனர். சரத் பொன்சேகா, மகேஷ் சேனாநாயக்க ஆகிய இருவரையுமே ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளவர் விசேட மருத்துவ நிபுணராவார். குறிப்பாக நியமனம் வழங்கும்போது அவர் இராணுவமா, எந்த இனத்தை, மதத்தைச் சார்ந்தவர் என்று அல்லாமல், தகுதி அடிப்படையிலேயே வழங்கப்படவேண்டும். அதனையே ஜனாதிபதி செய்துவருகிறார். இராணுவ மருத்துவ அணியில் இருந்த திறமையான தகுதியுடைய மருத்துவ அதிகாரியே இவர். எனவே, அவரின் தகமைமையில் எவ்வித குறைபாடுகளும் இல்லை. அது இராணுவ மயமாக்கல் செயற்பாடும் கிடையாது. கடந்த ஆட்சியின்போது 6 நாடுகளுக்கு தூதுவர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்படி செய்தவர்களே குறுகிய அரசியல் நோக்கில் தற்போது விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

நாட்டுக்கு புதியதொரு வழியைக் காட்டவே ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ஷ வந்துள்ளார். அவர் ஒரு இராணுவ அதிகாரி. அவர்போன்ற தலைவர் தற்போதைய சூழ்நிலையில் இல்லாது இருந்திருந்தால் நாட்டுக்கு என்ன நடந்திருக்கும்? அமெரிக்க வரலாற்றில் இதுவரை 44 பேர் ஜனாதிபதிகளாக பதவி வகித்துள்ளனர். இவர்களில் 26 பேர் இராணுவத்தில் இருந்தவர்கள், என்றார். (ஒ,5,44)

# விசேட வர்த்தமானி இழுபறி: சட்டமா அதிபருடன் பேச்சு!

கொழும்பு. மே 13

விசேட வர்த்தமானி அறிவித்தல் குறித்து சட்டமா அதிபருடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ்க்கு மத்தியில் பொதுமக்களின் வாழ்க்கையை மீள ஆரம்பிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்தது, எனினும் அது தாமதமாகியுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், அது விரைவில் வெளியாகும் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# ஊதிய இழப்புக்கு சம்மதிக்காதீர்கள்

## *சம்பிக்க அறிவுறுத்தல்*

கொழும்பு, மே 13



நாட்டு மக்களிடம் கொள்ளையிடப்பட்ட பணத்தைக் கொண்டு அரச ஊழியர்களுக்கு ஆறு மாதம் வரை எந்தச் சிக்கலும் இன்றி ஊதியம் வழங்கமுடியும். நாட்டு மக்களின் நிதியை மோசடி செய்தவர்களுக்காக அரச ஊழியர்கள் எதற்கு சம்பளத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று கேள்வி எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இவர்களுக்கு எதிராக அரச ஊழியர்கள் குரல் எழுப்பவேண்டும் என்றும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
டைட்டானிக் கப்பல் மாதிரி பொருளாதார கப்பலொன்றைக் கடலுக்குள் அனுப்பி அது பொருளாதார நெருக்கடி எனும் பனிக்குன்றில் மோதி மூழ்கிக் கொண்டிருக்கையில் உழைக்கும் மக்களை தோணிகளில் ஏறும்படி கூறுவதே தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரச் சித்தாந்தம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் அரச நெருக்கடிகளுக்கு முற்றிலும் பொறுப்புக் கூறவேண்டிய ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும், பேராசிரியர் பி.பீ.ஜெயசுந்தரவுக்கும் அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதற்கு எவ்வகையிலும் உரிமை கிடையாது என்பதுடன் அது தார்மீகமற்ற செயலாகும். ஜயசுந்தர, ராஜபக்ஷ குடும்பத்தினரின் சௌபாக்கிய பாதையின் வழிகாட்டியாக இருப்பதுடன் அவர்களை இரட்சிப்பவராகவும் விளங்குபவர். அதனால் அவரது கருத்து அவரது சொந்தக் கருத்தாகிவிட முடியாது. தற்போது நாட்டில் நிலவும் துரதிர்ஷ்டவசமான பொருளாதார நிலைக்கு ராஜபக் ஷக்களைப் போன்று பி.பீ.ஜயசுந்தரவும் பொறுப்புக் கூறவேண்டும் என்றார். (ம)

# பணியிடங்களில் ஒன்றாக உண்ணாதீர்!

கொழும்பு, மே 13

கொரோனா வைரஸ் பரவலானது மீண்டும் ஏற்படாதிருக்க மக்கள் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி செயற்படுவது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார். இல்லையென்றால், மீண்டும் நாட்டுக்குள் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் ஆபத்து காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஒன்று கூடி உணவு உண்பதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஒ,5)

# மக்களின் செயல்: திருப்தியில்லை!

## *பொலிஸார் ஏமாற்றம்*

கொழும்பு, மே 13

மக்களின் செயற்பாடுகள் குறித்து திருப்தி அடைய முடியாது என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். எனினும், இந்த நடவடிக்கைகளின் போது பொதுமக்களினால் வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்பு குறித்து திருப்திகொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் தொலைக்காட்சி சேவையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ,5)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறபேறுகள் அண்மையில் வெளியானது. அதன் அடிப்படையில் பாடசாலைகளின் பெறுபேறுகள்:

### வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்

பொ.சுவேதா -8ஏபி, வி.தர்மிஷன் -7ஏ2பி, த.அபிநயா - 6ஏபி2சி, கி.ஜீவிகா - 4ஏபி4சி, ச.சர்விகா - 4ஏபி2சி, மோ.டினோஜன்-3ஏ3பிசிஎஸ், தி.திருவோஜிதன்-2ஏ3பி2சிஎஸ், க.கஜானன் -2ஏபி4சிஎஸ், கெ.பிரியங்கா - ஏ2பி4சி, வி.கஜினா ஏபி5சி, வி.வினோதராஜ் - ஏ3சி3எஸ், ச.பவிதா - 2பி4சிஎஸ், எஸ்.டனிஷா- 2பி4சிஎஸ், இ.யசிகரன் - பி5சிஎஸ், பா.நிறோஜா- பி4சி2எஸ், எல்.யகிதா - 4சி3எஸ்.

### சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி

**தமிழ் மூலம்**

ரி.சாருஜா -9ஏ, பி.சுபானுஜன் -7ஏபிசி, என்.ஜானுஜா - 6ஏ3பி, எஸ்.சுஞ்சயன் - 6ஏ2பிசி, கே.பிரணவன் - 6ஏபிசிஎஸ் ,ஜெ.சர்மிலன்-5ஏ3பிசி, வி.குகதீசன் - 5ஏ3பி, எஸ்.கௌசிகன்- 5ஏ3பிஎஸ், ஜ.சோபிகன் - 4ஏ3பி3சி, எம்.கோபிசாந் - 4ஏ3பி3சி, ஏ.தனுசா - 4ஏ2பி3சி.

**ஆங்கிலம் மூலம்**

ஆர்.பிரதாபன் - 9ஏ, எஸ்.யுஸ்திகா -5ஏ3பிசி

### நெடுந்தீவு மகாவித்தியாலயம்

பீலிஸ் ஜேக்கப் ஜெயக்குமார்-6ஏ2பி கமல்ராஜ் லோஜித் - 3ஏ4பிசிஎஸ் ரவிக்குமார்ஜெறின்ராஜ் - 3ஏபி4சிஎஸ் அலோசியஸ் யூட்தாஸ் தனுஷன் - 2ஏ5பிசிஎஸ், தர்மசீலன் கிறிஸ்ரினா - 2ஏ4பி2சிஎஸ் பிறேமராசா கஜிதரன்- 2ஏ4பி2எஸ் அந்தோ னிப்பிள்ளை அமல ஆன்ஸ்- 2ஏபி6சி அன்ரனிஸ் சகாய சுதர்ஷன் - 2ஏ2சி3எஸ், ஜேசுதாசன் அன்புராஜ் - ஏ3பி2எஸ், ஜேசுராஜா மைக்கல் - ஏ2பி4சிஎஸ், உகேந்திரன் டொறின்டா- ஏபி5சி2எஸ், அன்ரன் அமலதாஸ் றோபேட் கனிசியஸ் கஜினா - ஏபி4சி2எஸ் அன்ரன் அமலதாஸ் அனுஷிகா - ஏ2சி3எஸ். அன்ரன்; ஜெயராஜசிங்கனா ஜெகதாசன் ஜோண் ஜெலக்ஸ்- பி4சி2எஸ்.

# அவசரம் என்றால் மட்டுமே பல் சிகிச்சைக்கு செல்லவும்

## மாகாண பல் மருத்துவ சங்கம் கோரிக்கை

வவுனியா, மே 13

**அவசர தேவையுடையவர்கள் மாத்திரமே பல் மருத்துவ சேவைக்குச் செல்லுங்கள் என்று வடக்கு மாகாண பல் மருத்துவ சங்கத்தின் தலைவர் எம்.உதயகுமார் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இது பற்றி, வவுனியா வைரவபுளியங் குளத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பற்சிகிச்சைக்குச் செல்லும் வடக்கு மாகாண மக்களின் பாதுகாப்புக்கருதி சில வேண்டுகோளை நாம் முன் வைக்கின்றோம். தற்போது நாடு இயல்புநிலைக்குத் திரும்பியிருந்தா லும் கொவிட்-19 தாக்கம் சமூகத்தில் பரவக்கூடிய வாய்ப்புகள் முற்றாக மறைந்துவிடவில்லை. எனவே இன் றிலிருந்து பல், வாய் தொடர்பான அவசர சிகிச்சைகள் தேவைப்படுபவர் கள் மாத்திரமே மருத்துவமனை களுக்குச் செல்லவேண்டும்.

குறிப்பாக பல், முகத்தில் ஏற்படும் விபத்து அல்லது காயங்கள் என்பன வற்றுக்கு மாத்திரம் சிகிச்சை பெறுவ தற்கு செல்வதோடு ஏனைய செயற் பாடுகளை நிலைமை சீரடைந்த பின்னர் பொதுமக்கள் பெற்றுகொள் ளமுடியும்.

ஏனெனில், வாயில் இருக்கும் எச்சிலி லிருந்து கிருமி பரவக்கூடிய வாய்ப்பு கள் அதிகம் இருக்கின்றன. எனவே குறித்த விடயத்தில் கவனம் எடுத்து எம்மையும் சமூகத்தையும் நாம் பாது காக்கவேண்டும். பற்சிகிச்சைக்கு செல்வோர் பொதுப்போக்குவரத் தைத் தவிர்த்து தனியாகச் செல்ல வேண்டும். வேறுஒருவரை அல்லது குழந்தைகளை உதவிக்கு அழைத் துச் செல்வதையும் தவிர்க்கவேண் டும். மருத்துவமனைகளுக்குச் செல் லும்போது கைகளைச் சுத்தம்செய்வ துடன் காத்திருப்போர் பகுதியில் அமர்ந்திருக்கும்போது சமூக இடை வெளியைப் பின்பற்றவேண்டும். மருத்துவரின் மேசைகள், கதவுகள் போன்றனவற்றைத் தொடுவதைத் தவிர்க்கவேண்டும்.

முகக்கவசங்களைக் கழற்றும்போது அதனை பிரத்தியேக இடத்தில் வைத் துவிட்டு சிகிச்சை முடிந்தபின்னர் எடுத்துசெல்லவேண்டும். பல், வாய் போன்றனவற்றைத் தொடுவதையும் தவிர்க்கவேண்டும். பல் பிடுங்கிய பின்னர் வெளியில் வந்து எச்சில் துப் புவதைத் தவிர்ப்பதுடன் வைரஸ் பர வல் கட்டுப்பாட்டுக்கு வரும்வரைக் கும் அனைத்துப் பொதுமக்களும் அதனைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவ மனையை மிக அண்மித்து தகுதி யற்ற சில பல் மருத்து நிலையங்கள் உள்ளன. மக்கள் அந்த இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவேண்டும். அத் தகைய இடங்களுக்குச் செல்லும் போது அந்த இடங்களிலுள்ள மருத் துவர் தொடர்பான உறுதிப்பாட்டை யும், கல்வித் தகுதியையும் அறிந்த பின்னர் செல்லுங்கள் என்று பொது மக்களைக் கேட்டுகொள்கின்றோம் என்றார்.

இது தொடர்பான ஏனைய தகவல் களை இலவசமாக பெற்றுகொள்வ தற்கு குறிப்பிட்ட இலக்கங்களுக்கு தொடர்புகொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாஉதயகுமார் 0771999959, விதுசன் 0773090519,யாழ்பா ணம் கம்லெத் 0777734100, சுரேஸ் 0777730416,மன்னார் சிவா 0776682575,கிளிநொச்சி தவராஜா 0777445161, எழில்வேல் 0779789840, முல்லைத்தீவு சீலன் 0711234516. (த-110)



# இலவச நடமாடும் மருத்துவ முகாம்

மன்னார், மே 13

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் நலன் கருதி இலவச நடமாடும் மருத்துவ முகாம் அண்மையில் இலுப் பைக்கடவை கலாசார மண்டபத்தில் நடைபெற் றது.

வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி வைத்தியர் ஜீ. குணசீலன் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் இலுப்பைக்கடவை, அந்தோனியார்புரம், கள்ளி யடி உள்ளிட்ட அயல் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட னர். (ஐ-56)

# கிளிநொச்சியில் நினைவாலயம்

## கரைச்சி சபை அமைக்கவுள்ளது

கிளிநொச்சி, மே 13

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரில் இறந்த மக்களுக்காக கரைச்சியில் நினைவுத் தூபியுடன் நினைவாலயம் ஒன்று அமைக்கப்ப டவுள்ளது.

கரைச்சி பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற அமர்வில் இது பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட் டது.

இந்த நினைவாலயம், கிளிநொச்சி நகரப்பகுதி யில் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள பசுமைப் பூங்காவில் அமைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் மே 18 ஆம் திகதி இதற்கான பணிகள் ஆரம்பிப்பது என்றும் சபையில் தீர்மானிக்கப்பட் டது.

கட்டுமானப் பணிக்கு முதற்கட்டமாக சபை உறுப் பினர்களான ஜீவராஜா ஐந்து லட்சம் ரூபா காசோ லையையும், ரஜனிகாந்த் ஒரு லட்சம் ரூபா காசோலையையும் சொந்த நிதியிலிருந்து நேற்று தவிசாளரிடம் வழங்கினர். ஏனைய உறுப் பினர்களும் தமது மாத சம்பளத்தை வழங்கு கின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.

நினைவுத் தூபியின் அமைப்பு, மொத்த செலவு போன்ற விடயங்கள் நாளை(இன்று) மூன்று மணியளவில் கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் வேழமாலிதன் தலை மையில் ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

இறுதிப்போரில் இறந்த மக்களுக்கு நேற்றைய அமர்வில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட் டது. (த-35)

# காணொலி மூலம் கற்பித்தல் செயற்பாடு

தேசிய கல்வி நிறுவகமும், வடமாகாணக் கல்வி பண் பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறைத்திணைக் களத்தின் கற்றல் உபகரண அபிவிருத்திப் பிரிவும் இணைந்து, வீட்டில் இருந்த வாறே மாணவர்களுக்கான கல்விப்போதனையை வழங் கக் கூடிய காணொலிகளுக் கான ஒளிப்பதிவு நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளன.

க.பொ.த உயர்தர மாணவர்க ளுக்கான தமிழ், பௌதீகவி யல், உயிரியல், புவியியல், தொழிநுட்பப் பாடங்கள் மற் றும் 3 ஆம் தவணைக்கான பாடத்திட்டத்துடன் கூடிய மீட் டல் பயிற்சிகள் என்பன உரிய வளவாளர்கள் மூலம் ஒளிப்ப திவு செய்யப்பட்டு, நேத்ரா தொலைக் காட்சி மூலம் ஒளிப ரப்பப்படுகின்றன.

இவற்றின் மூலம் மாணவர் கள் தமது கற்கைகளை வீட் டில் இருந்தவாறே இலகு வான முறையில் தொடரமுடி யும் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (க)

# பத்திமா அன்னையின் திருப்பலி இன்று நேரலையாக ஒளிபரப்பு!

யாழ்ப்பாணம், மே 13

பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் திருநாள் திருப்பலி இன்று நேரலையாக ஒளிபரப்பப்படும் என்று யாழ்ப்பாண ஆயர் இல்லம் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது:


மே மாதம் 13ஆம் திகதி (இன்று) பத் திமா அன்னையின் திருநாள் திருப்பலியை யாழ் ஆயர் கலாநிதி யஸ் ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகை பண்டத்தரிப்பு பத்திமா அன்னை யாத்திரைத்தலத்தில் காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுப்பார். இந்தத் திருப்பலியா னது நேரலையாக வளமையான தொலைக்காட்சிகளிலும் இணையத்தி லும் ஒளிபரப்பப்படும். தற்கால விதிமு றைகளின்படி இறைமக்கள் யாரும் இந்தத் திருப்பலியில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாது - என்றுள் ளது. (ம)

# சந்தையை விடுவிக்குமாறு வியாபாரிகள் கோரிக்கை

சாவகச்சேரி,மே 13

தற்போது பெய்து வரும் மழையால், வீதியோரங்களில் வியாபாரம் செய்ய முடியாத நிலையில், சந்தைக்குள் வியாபாரம் செய்ய அனுமதிக்குமாறு சாவகச்சேரி பொதுச் சந்தை வியாபா ரிகள் சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் சாவ கச்சேரி கைத்தொழில் வணிகர் மன் றத்தினர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"நீண்டகாலமாக சந்தையில் வியாபா ரம் செய்து வந்த நாங்கள், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக தொழிலை நடத்த முடியாமல் உள்ளோம். கடந்த மூன்று தினங்களாகப் பெய்து வரும் மழை யால், வீதியோரங்களில் வியாபாரம் நடத்த முடியாமல் உள்ளது. சந்தைக் குள் எம்மை வியாபாரம் செய்ய அனு மதித்தால், தங்களால் விதிக்கப்படும் சுகாதார விதிமுறைகளுக்கேற்ப வியாபாரத்தை மேற்கொள்வோம்" என்று வியாபாரிகள் தெரிவித்துள்ள னர். (க-9)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கொரோனாவின் இரண்டாம் கட்ட தாக்குதலுக்கு இடமளியாதீர்

கொரோனாவின் தாண்டவத்தையடுத்து முடக்க நிலைக்குச் சென்ற சில நாடுகள் மீண்டும் இயல்புநிலைக்கு திரும்பியுள்ள சந்தர்ப்பத்தில் தன்னுடைய இரண்டாம் கட்டத் தாக்குதலை 'கொவிட் 19' வைரஸ் ஆரம்பித்திருக்கிறது. சீனாவின் வுகான் மாகாணத்தில் முதன் முதலாக இனங்காணப்பட்டிருந்த கொவிட் 19 வைரஸ் எவரும் எதிர்பாராத வகையில் முழு உலகையுமே உலுப்பியெடுத்து வருகின்றது. கொரோனாவைத் தடுக்க இருந்த ஒரேவழி நாடுகளை முடக்கநிலைக்குக் கொண்டு செல்வதுதான். இல்லாவிட்டால் இப்போதுள்ளதைவிடவும் பன்மடங்கு வேகமாகக் கொரோனா பரவி, பேரழிவை நிகழ்த்தக் கூடும். ஆனால் எத்தனை நாட்களுக்குதான் வீட்டுக்குள்ளேயே மக்களை முடக்கிவைத்திருக்கமுடியும்? பொருளாதாரம் சரிந்து, பட்டினி நிலை மேலோங்கி, சகல செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடையும் நிலையை எட்டிவிட, எப்பாடுபட்டாவது இயல்புநிலையைக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று அரசுகள் துடித்தன. அதன் முதற்கட்டமாக கொரோனாப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்கி, சீனா, ஜேர்மனி போன்ற நாடுகள் முடக்க நிலையை நீக்கின. கொரோனாவுக்கு எதிரான போரில் இது பெரும் சாதனையாகக் கொள்ளப்பட்டது. குறித்த நாடுகளைப் பின்பற்றி, ஏனைய நாடுகளும் கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டுவந்து, நாட்டையும் பழைய நிலைக்கு மீட்டெடுக்கலாம் எனச் சொல்லப்பட்டது.

ஆனால் அந்தப் புகழாரங்களையெல்லாம் மீறி, கொரோனா தன் வேலையை மீண்டும் காட்டத் தொடங்கியிருக்கிறது. குறிப்பாக சீனாவில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படத் தொடங்கியுள்ளனர். இதனால் சில பகுதிகளைச் சீனா மீண்டும்' லொக் டவுன்' செய்யும் இக்கட்டானநிலை எழுந்துள்ளது. அதேபோன்றே ஜேர்மனியிலும் புதிய கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். கொரோனாவின் இந்த இரண்டாம் கட்டத் தாக்குதலை குறித்த இரு நாடுகளும் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. போதாக்குறைக்கு முடக்கநிலை நீக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்வுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு சமூகப்பரவலால் பாதிக்கப்பட்ட கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளமை, அடுத்து வரும் நாள்களில் குறித்த நாடுகளில் கொரோனாவால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கையை மீண்டும் உயர்த்தப்போகின்றது. பழையபடி அதனைத் தடுக்க பல பகுதிகள் முடக்கப்படுவதும், மக்களுக்கான பொருளாதார நெருக்கடிகள் முன்னரைக் காட்டிலும் உயர்வடைவதும் , மருத்துவமனைகள் கொரோனா நோயாளர்களால் நிரம்பி வழிவதும் சீனாவிலும், ஜேர்மனியிலும் மீண்டும் முதலில் இருந்தே ஆரம்பமாகப் போகின்றன. இத்தனைநாளும் கொரோனாவை ஒழிக்க அந்த நாட்டு அரசுகளும், மக்களும், சுகாதாரத்துறையும் காட்டிய அர்ப்பணிப்பும், உழைப்பும் வீணாகிப் போயுள்ளன.

இதேபோன்றதொரு நிலைதான் இப்போது இலங்கைக்கும். ஆனால் நல்லவேளையாக சீனா, ஜேர்மனி போல ஒட்டுமொத்தமாக முடக்கல்நிலை அகற்றப்படவில்லை. சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஊரடங்கு தளர்த்தப்பட்டு, இயல்புவாழ்வுக்குத் திரும்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் அவைகூட அவ்வளவு பாதுகாப்பானவையல்ல. இன்னமும் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். நல்லவேளையாக இன்னும் சமூகப் பரம்பல் நிலையில் இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டோர் மத்தியில் இருந்தே இந்தப் புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால், பெரிதாகப் பாதிப்பு இல்லைத்தான். ஆனால் சுகாதாரத்துறையினதும், பாதுகாப்புத் தரப்பினதும் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, சமூகமட்டத்தில் வேறு கொரோனாத் தொற்றாளர்கள் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். இப்போது தனிமைப்படுத்தப்பட்டு, கொரோனாவில் சிக்கியுள்ளதாக இனங்காணப்பட்டு வருவோர் , இந்த இடைப்பட்ட நாள்களில் பழகிய அத்தனை பேரையும் கண்டுபிடித்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தல் என்பது சாத்தியமற்றது. எனவே அந்தத் தொடர்புச் சங்கிலியில் விடுபட்டவர்கள் , சமூக மட்டத்திலான கொரோனாத் தொற்றுக்கு வித்திடக்கூடும். அது இலங்கையிலும் முடக்கநிலை தளர்த்தப்பட்டுள்ள இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி இரண்டாம் கட்டமாக கொரோனா விஸ்வரூபமெடுக்கவும் வாய்ப்புண்டு. எனவே முன்னெச்சரிக்கையோடு, எப்போதும் கொரோனாவின் பிடிக்குள் சிக்கும் வாய்ப்புண்டு என்ற எண்ணத்தோடு, சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்றுவது காலத்தின் கட்டாயமாகும்.

# இணையவழிக் கல்வி மிகப்பெரும் வெற்றி!

*அமைச்சுச் செயலர் தெரிவிப்பு*

**கொழும்பு, மே 13**

**அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கடந்த இரண்டு மாதங்களாக தொலைதூர கல்வி முறையின் கீழ் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துவருவதாக உயர்கல்வி, தொழில் நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலாளர் திசாநாயக்க தெரிவித்தார்.**

அரசதகவல்திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் கல்வி பயிலும் சுமார் 60 இலட்ச மாணவர்கள் பயனுள்ளவகையில் இந்தக் கல்வி முறையை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆய்வு செய்தோம். இதன்போது இதனை மாணவர்கள் மிகவும் பயனுள்ளவகையில் பயன்படுத்துவதை கண்டறிந்தோம்.

தற்போது இந்த தொழில்நுட்பம் மூலமான கல்விச் செயற்பாடுகள் வெற்றிகரமாக இடம்பெற்றுவருகின்றன. இந்த அனுபவங்களின் மூலம், எதிர்காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொற்றுநோயை எதிர்கொள்வதில் ஒரு புதிய போக்கு ஏற்பட்டுள்ளது.

விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுநோயை தடுப்பதற்கான புத்தாக்கங்களை மேற்கொள்வதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். புத்தாக்க ஆணைக்குழு உடனடியாக தலையிட்டு இந்த செயல்முறைக்கு நிதி உதவி வழங்கியது. அடையாளம் காணப்பட்ட 180 புத்தாக்கங்களில், 60 தயாரிப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கடந்த காலத்தில் 112 புதிய கண்டுபிடிப்புகள் பெறப்பட்டுள்ளன, மேலும் நிபுணர்களின் குழுவினர் இதுதொடரபில் கவனம் செலுத்திவருகின்றனர், என்றார். (ஒ,5)

# 50 சதவீதமான பாடசாலைகளில் 200க்கும் குறைவான மாணவர்கள்

கொழும்பு, மே 13

இலங்கையிலுள்ள முழு பாடசாலைக் கட்டமைப்பில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 200 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர் என்று கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாடசாலைகள் எவ்வாறு மீள ஆரம்பிக்கப்படும் என்பது குறித்து கருத்து வெளியிட்ட அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

எமது பாடசாலைக் கட்டமைப்பில் 10 ஆயிரத்து 167 பாடசாலைகள் உள்ளன. அத்துடன், 829 பிரிவெனாக்களும், 80 தனியார் பாடசாலைகளும் செயற்படுகின்றன.

இவற்றில் 10 மாணவர்களுக்கும் குறைவாக கல்வி கற்கின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 123 ஆகும். அத்துடன், 343 பாடசாலைகளில் 50 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர். 3 ஆயிரத்து 4 பாடசாலைகளில் 100 இற்கும் குறைவான மாணவர்களும், 5 ஆயிரத்து 133 பாடசாலைகளில் 200 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி பயில்கின்றனர்.

அதாவது எமது முழு பாடசாலைக் கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 200 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி பயில்கின்றனர். இத்தகைய பாடசாலைகளை ஒரே தடவையில் திறப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் பாடசாலைகளை நான்கு கட்டங்கமாக மீள ஆரம்பிப்பதற்கான யோசனையும் தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து தொற்று நீக்கம் செய்யப்படும். முதலில் அதிபர் உட்பட ஆசிரியர்கள் வருகை தந்து நேரசூசியை தயாரிக்கலாம். ஒரு வாரத்துக்கு பின்னர் உயர்தர மாணவர்களை அழைக்கலாம். அதன்பின்னர் கட்டம், கட்டமாக தொடங்கலாம். இடைவெளியைக்கூட கட்டம், கட்டமாக வழங்கலாம். எது எப்படியோ மாணவர்களின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பாடசாலைகள் திறக்கப்படும்.

அனைத்து பாடசாலைகளுக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கை கழுவும் கருவிகளும், உடல் உஷ்ணத்தை அளவிடும் கருவியும் வழங்கப்படும். இவற்றுக்கான செலவை பெற்றோர் பொறுப்பேற்க வேண்டியதில்லை. யுனிசெப், ஐ.சி.ஆர். உட்பட மேலும் சில தனியார் அமைப்புகள் எம்முடன் கரம்கோர்த்துள்ளன.

அத்துடன், கிழமையில்ஏழுநாள்களும் பாடசாலை நடைபெறலாம். எல்லா நாள்களிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் வரவேண்டியதில்லை. சுகாதார நடைமுறைக்கேற்ப நிகழ்ச்சி நிரலை தயாரித்துக் கொள்ளலாம்-என்றார்.(ஒ,5,44)

## உஷார்!

கொழும்பு, மே 13

கையடக்க தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட பணபரிமாறலை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடி மற்றும் நபர்களை அச்சுறுத்தி கப்பம் பெறுவது தொடர்பிலான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே இதுதொடர்பில் பொது மக்கள் விழிப்புடனிருக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (ஒ,5)

# தனியார் போக்குவரத்து ஊழியருக்கும் இடர்காலக் கொடுப்பனவுகள் வேண்டும்

## முல்லை.தனியார் பேருந்து ஊழியர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 13

**முல்லைத்தீவு மாவட்டத் தனியார் போக்குவரத்துப் பேருந்து ஊழியர்கள் கடந்த இரண்டு மாதங்களாக எந்த வித பேருந்து போக்குவரத்திலும் ஈடுபடாத நிலையில் குடும்பங்களின் நிலையைக் கருத்தில் கொண்டு ஊழியர்களுக்கான இடர் கொடுப்பனவு வழங்குமாறு போக்குவரத்து அமைச்சு மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இரண்டு மாதங்களாக வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள தனியார் போக்குவரத்து ஊழியர்கள் தொழில் இன்றி மிகவும் சொல்லொணாத்துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இதுவரையில் தனியார் போக்குவரத்துச் சங்கமோ வேறு தொண்டு அமைப்புக்களோ எந்த வித உதவிகளையும் வழங்கவில்லை. எனவே எங்கள் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு உதவியைப் பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் பிரதிகள், முல்லைத்தீவு மாவட்டச்செயலர், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தினர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தனியார் போக்குவரத்து ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ-19)

# சைனா பஜாரில் போராட்டம்



மன்னார், மே 13

மன்னார் சைனா பஜார் பகுதியில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் நடை பாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் நகர அபிவிருத்திக்கு நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படும் வகையில் எவரும் செயற்படக்கூடாது. விட்டு கொடுப்புடன் செயற்படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு, சமூக இடைவெளியைப் பேணிப் போராட்டத்தை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸாருடனும் கலந்துரையாடிய பின்னர் அவ்விடத்தில் இருந்து சென்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் தெரிவித்ததாவது:
மன்னார் நகரப் பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ள நிலையில், நகர சபையின் கோரிக்கைகளுக்கு அமைவாக நாங்கள் வியாபார நிலையங்களை விட்டு, நகர சபையால் அமைத்து வழங்கப்பட்ட வியாபார நிலையங்களுக்குச் சென்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

நகர முதல்வரின் பணிப்புரைக்கு அமைவாக சுமார் 43 வியாபாரிகளைக் கொண்ட கடைத் தொகுதி அனைத்தையும் அனைவரும் ஒரே நேரத்தில் அகற்றி, மன்னார் நகரை அழகு படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தோம். தனியார் வாடகை போக்குவரத்துச் சங்க உரிமையாளர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். அவர்களின் வாகனங்களை நிறுத்தி சேவையை மேற்கொள்ள ஓர் மாற்று இடம் வழங்கப்பட வேண்டும். நகரத்தின் அபிவிருத்திக்கு தடையை ஏற்படுத்துவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றனர். (சு-56)

## போதைக்கு அடிமையான 48 பேர் கந்தக்காட்டுக்கு அனுப்பிவைப்பு

முல்லைத்தீவு, மே 13

போதைப் பொருளுக்கு அமையாளவர்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் 48 பேர் கேப்பாபிலவு விமானப் படை கண்காணிப்பு நிலையத்தில் இருந்து கந்தக்காட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பின் பல்வேறு இடங்களில் போதைக்கு அடிமையானவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளவர்களில் 48 பேர் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் உள்ள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்துள்ள நிலையில் அவர்களின் கண்காணிப்பு நாள்கள் நிறைவடைந்து அவர்களுக்கான பரிசோதனைகளும் நடத்தப்பட்டு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போதைப்பொருளுக்கு அடிமையான இந்த நபர்கள் மாவட்ட நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கந்தக்காடு போதைப் பொருள் பாவனை புனர்வாழ்வு நிலையத்துக்கு நேற்று முன்தினம் பேருந்துகளில் அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களில் நான்கு பெண்களும் அடங்குகின்றனர். (ப-19)



## சென்னையிலிருந்து 320 பேர் நாட்டுக்கு

கொழும்பு,மே 13

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தமிழ்நாடு, சென்னையில் சிக்கியிருந்த 320 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் மூலம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வருகை தந்த அனைவரும் கிருமித்தொற்று நீக்கப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,மே 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று புதன்கிழமைமின்தடைப்படும்என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் தூட்டுவாகை, முகத்தான்குளம் 2 ஆவது பண்ணை, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும். மன்னார் மாவட்டத்தில் வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை, வங்காலை பிரதேசம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# இராணுவத்தில் இணைக்கப்பட்ட தமிழர்கள் இடை நிறுத்தப்படார்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றிய தமிழ் இளைஞர்கள், தொழிலில் இருந்து நிறுத்தப்படமாட்டார்கள் என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தல்செவன விடுதியில் பணியாற்றியவர்கள் ஆட்சி மாற்றத்தின் பின்னராக பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார்களா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தத் தகவல் முற்றிலும் பொய்யானது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் தான், தமிழ் இளைஞர்கள் குறிப்பாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களும், புனர்வாழ்வு பெற்று இராணுவத்துடன் இணைந்து சேவையாற்றினர். பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது அவர் ஏற்படுத்திய திட்டத்தை, தற்போது ஜனாதிபதியாக அவர் பதவிவகிக்கும் இந்த நேரத்தில் உதாசீனம் செய்துவிடும் நோக்கம் கிடையாது. மக்களுடன் இருக்கும் தொடர்பை இல்லாமல் செய்யும் செயலை நாம் ஒருபோதும் செய்யப் போவது கிடையாது. தல்செவன விடுதியில் பணியாற்றியவர்கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். வைரஸ் பரவலை அடுத்து விடுதிகளில் தங்க விரும்பாத காரணத்தால் அவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

நாட்டின் அனைத்து விடுதிகளும் மூடப்பட்டுள்ளன. தனியார் துறை சிலவற்றில் நிரந்தரமாகப் பணியாற்றியவர்கள் தவிர்ந்த தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை இரண்டு மாத ஊதியத்தை வழங்கி அவர்களது சேவையை இந்தக் காலப்பகுதியில் இடைநிறுத்தியுள்ளோம். மீண்டும் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் உடனடியாகவே அவர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார். (சு-111)

# ஆயுதப் போராட்டத்தை மறுப்பவன் ஈழத் தமிழனல்ல

## முன்னாள் எம்.பி சிவமோகன் காட்டம்

வவுனியா, மே.13

**ஆயுதப்போராட்டம் ஈழத்தமிழர் வரலாற்றில் தவிர்க்கமுடியாத அடையாளம். அதனை மறுப்பவன் ஈழத்தமிழன் என்று சொல்வதற்கு அருகதையற்றவன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.**



வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அகிம்சை அடக்கம் செய்யப்பட்ட நாட்டில்போர் பலாத்காரமாகத்திணிக்கப்பட்டது. எனவே ஈழவிடுதலைப் போராட்டத்தையும் தேசியத் தலைவரது அரசியல், ஆயுத போராட்டத்தையும் எவராலும் மறுக்க முடியாது. மறுப்பவர் ஈழதமிழன் என்று சொல்வதற்கு அருகதையற்றவர். சுமந்திரனது கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகவே இருந்துவிட்டு போகட்டும். அப்படி ஒரு வசனம் தனிப்பட்ட கருத்தாகக் கூட சுமந்திரனின் வாயில் இருந்து வந்திருக்க கூடாது. முள்ளிவாய்க்காலில் அடைந்த வேதனையை அனுபவிக்கும் வாரமிது. வன்னி மண்ணிலே வானிலே குண்டுவீச வங்கறிலே ஒருநாள் கூடப் படுத்திருக்காதவர்களுக்கு விமர்சனம் செய்ய எந்த அருகதையும் இல்லை. குண்டு வீச்சிலே கால்கள் சிதைந்து மயக்கத்திலே இருந்த ஒருவர் முழித்தெழுந்து எங்கே என் கால்கள் என்று கேட்ட வேதனையும், அதனை அகற்றிய வைத்தியர்கள் அடைந்த வேதனைகளும் இவர்களுக்குப் புரியாது.

கூட்டமைப்பு தனி நபர்களின் சொத்து அல்ல. தேசியத் தலைவரால் வடிவமைக்கப்பட்டது. அதனைப் பாதுகாத்து ஒற்றுமையுடன் முன் கொண்டுசெல்லவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்கிறது. எங்களுடன் கலந்தாலோசிக்காமல் இப்படியான கருத்துக்களைக் கூறவேண்டாம் என அவரிடம் நாங்கள் வினயமாக கேட்டுக்கோள்கிறோம்.

ஒரு கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் தனது தனிப்பட்ட கருத்தை சொல்லும் போது அது அவரது கட்சிக்கும் பாதிப்புச் செலுத்தும். எனவே ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு தனிப்பட்ட கருத்து என்று சொல்வது அழகாக இருக்காது. அந்தத் தவறை அவர் விட்டிருக்கக் கூடாது. ஆயுதப்போராட்டம் கையில் எடுக்கப்படவில்லையாக இருந்தால் ஒட்டுமொத்த தமிழர்களும் அடையாளமே இல்லாமல் கொன்று குவிக்கப்பட்டிருப்பார்கள். ஆயுதப் போராட்டம் ஈழத்தமிழர் வரலாற்றில் தவிர்க்கமுடியாத அடையாளம் - என்றார். (ப-110)

# சுமந்திரனின் கருத்துக்கு கிழக்கில் இருந்து எதிர்ப்பில்லை என்பதில் உண்மையில்லை

## துரைராசசிங்கம் தெரிவிப்பு

திருகோணமலை, மே 13



சுமந்திரனின் காணொலி தொடர்பில் கிழக்கிலிருந்து எவ்வித எதிர்ப்பும் வரவில்லை என்று வெளிவந்த செய்தியில் உண்மையில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நேற்று முன்தினம் காலை 09.13 மணியளவில் என்னோடு ஊடக நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சுமந்திரனுடைய பேட்டியைக் கேட்டீர்களா? என்று கேட்டார். நான் மரண வீட்டில் நின்றிருந்தேன். என்னுடைய கையடக்கத் தொலைபேசியில் இணையச் செயற்பாடு செயழிலந்திருந்தது என்றும், வீட்டுக்குச் சென்றதும் காணொலியைப் பார்த்துவிட்டு உங்களோடு தொடர்பு கொள்கின்றேன் என்றும் சொன்னேன். வீட்டுக்கு வந்ததும், இணையத்தின் மூலம் குறித்த காணொலியைப் பார்த்தேன். பின்னர் இது தொடர்பில் தலைவர் மாவை சேனாதிராஜாவோடு விடயத்தைப் பகிர்ந்து அளவளாவிவிட்டு 10.36 மணிக்கு குறித்த ஊடக நண்பரைத் தொடர்பு கொண்டு மேற்குறித்த விடயங்களைக் குறிப்பிட்டுவிட்டு சுமந்திரனைத் தொடர்பு கொண்டு நிலவரம் பற்றி அறிந்து தலைவர்களுடனும் தொடர்பு கொண்ட பின்னர் உங்களிடம் தொடர்பு கொள்கின்றேன் என்று குறிப்பிட்டேன். நான் சொல்லி முடித்து ஒருசில நிமிடங்களில் எனது நலன்விரும்பி ஒருவர் என்னைத் தொடர்புகொண்டு கிழக்கிலிருந்து எதிர்ப்பும் வரவில்லை என்று நீங்கள் சொன்னதாகச் செய்தி வந்திருக்கின்றது இது உண்மையா என்று கேட்டார். நான் நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வு பற்றி அவருக்குத் தெளிவு படுத்தினேன். இவை தான் நடந்த விடயங்கள். இவ்வாறிருக்க சுமந்திரனின் கருத்துக்கு கிழக்கில் இருந்து எவ்வித எதிர்ப்பும் வரவில்லை என்று நான் சொன்னதாக அவராகவே ஊகித்து ஒரு செய்தியைப் பிரசுரித்து எமது பெயருக்கக் களங்கம் ஏற்படுத்த விளைந்துள்ளமை வருந்தத்தக்க விடயம் - என்றார். (ப)

# பிரபாகரனை கொச்சைப்படுத்தினால் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

## ரவிகரன் காட்டம்

யாழ்ப்பாணம், மே 13

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட மாவீரர்களையோ, அங்கவீனமான போராளிகளையோ, ஏனைய போராளிகளையோ, அல்லது தலைமை தாங்கிய தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையோ யாராவது கொச்சைப்படுத்த எண்ணினாலோ, கொச்சைப்படுத்தினாலோ அதைத் தமிழ்மக்கள் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிதார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், அண்மையில் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில், தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பில் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் மக்களுக்கு நடந்த கொடுமைகளுக்காக, தமிழ்த் தலைவர்கள் பல விதத்திலும் போராடியிருந்தனர். அகிம்சை வழியில் போராடி இயலாத நிலையில்தான் இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப் போராடியிருந்தனர். நிச்சயமாக தமிழீழ விடுதலப்புலிகள் தமது போராட்டத்தை, தமிழ் மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நடத்தியிருந்தனர். இலங்கை அரசாங்கத்தால் இயலாத நிலையில், பலநாடுகள் சேர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மௌனிக்கச் செய்திருந்தனர். இது அனைவரும் அறிந்த விடயம். இவ்வாறு ஆயுதப் போரட்டத்தை மௌனிக்கச் செய்ததன் காரணமாக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த வடக்கு மாகாணசபையிலும், இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த தமிழக சட்டமன்றத்திலும், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது ஒரு இன அழிப்புப் போர் என்பதனை தீர்மானமாக நிறைவேற்றி உலக நாடுகளின் பார்வைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இந்த வகையிலே தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள் அனைவரும் தேசியத் தலைவரை, தமிழீழத்தின் தேசியத் தலைவராகவே பார்க்கின்றனர் - என்றார். (ப-246)

# சுமந்திரனை கட்சியிலிருந்தே தூக்கி எறியுங்கள்

## மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கட்சியிலிருந்தே தூக்கி எறியுங்கள் என்று, மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1961ஆம் ஆண்டு அறப்போர் காலத்திலிருந்து இன்று வரை தமிழ்த் தேசியம் ஈழத்தமிழர் நலம் எனத் தமிழ் அரசுக் கட்சி சார்ந்து பணிபுரிந்து கொண்டிருக்கிற மறவன்புலவு க. சச்சிதானந்தன் கோருகிறேன்.

சுமந்திரனைத் தமிழ் அரசுக் கட்சியை விட்டுத் தூக்கி எறியுங்கள் என்று 2018ஆம் ஆண்ட நவம்பர் 6இல் நான் மாவை சேனாதிராசாவுக்கு எழுதினேன். சுமந்திரனின் நாக்கு, கரி நாக்கு. தமிழை, தமிழரை, தமிழ் தேசியத்தை உணராத, அறியாத, புரியாத, தெரியாத விரும்பாத ஒருவரின் நாக்கே சுமந்திரனின் நாக்கு என்று நான் அன்று கூறினேன். எனவே தமிழ் அரசுக் கட்சியில் இருந்து நீக்குங்கள் எனத் தலைவருக்குக் கடிதம் எழுதினேன்.

அதற்கு முன்பு 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி வட மாகாணசபையை முடக்குவதற்கு அந்தக் காலப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சிக்கு சுமந்திரன் கைகொடுத்தார் எனக் குற்றம் சாட்டி எழுதினேன்.

சென்னையில் 100 அடி சாலையில் அமர்ந்திருந்த உயர்தர விடுதியொன்றில் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையினர் 2015இல் நடத்திய கருத்தரங்கில் முதல் முதலாகச் சுமந்திரனைச் சந்தித்தேன். ஈழத்தமிழரின் சார்பில் அவர் அங்கு பேசினார்.

அங்கே அவரின் பேச்சைக் கேட்டேன். இவருக்கும் தமிழுக்கும்- தமிழருக்கும்- தமிழ்த் தேசியத்திற்கும் என்ன தொடர்பு? இத்தகைய கரிநாக்கராக இருக்கிறாரே என மனத்துள் சினந்தேன்.

1961ஆம் ஆண்டு முதலாக தமிழ், தமிழர், தமிழ் தேசியம் ஈழத்தமிழரின் நன்மை என்பவற்றுக்காக தமிழகத்தில் நானும் இணைந்து சிறிது சிறிதாகக் கட்டியெழுப்பிய ஈழத்தமிழர் ஆதரவுக் கொள்கையைப் போட்டு உடைத்தார் 2015இல் சென்னையில் சுமந்திரன்.

சிங்களத் தொலைக்காட்சிப் பேட்டியில் சுமந்திரன் கொடுத்த விடைகள் கரிநாக்கராக அவரை உறுதி செய்துள்ளன.

தமிழர் இயல்பிலேயே அறநெறியாளர். ஆயுதங்களை 400 ஆண்டுகளாக அறியாதவர். அவர்களை ஆயுதம் தூக்குமாறு தூண்டியோர் 1948இல் விடுதலைக்குப் பின் வந்த சிங்கள அரசுகள். சிங்கள அரசுகளும் சிங்களக் குண்டர்களும் தொடர்ச்சியாக 1952இல் 56இல் 58இல் 61இல் 72இல் 74இல் 77இல் 82இல் 83 நடத்திய தமிழர் மீதான கொடும் பயங்கரவாதத்தை அரச பயங்கரவாதத்தை நினைவுகூரச் சுமந்திரன் தவறிவிட்டார்.

அப்பாவிகளாக இருந்த தமிழ் இளைஞர்களை ஆயுததாரிகள் ஆக்கிய அரச பயங்கரவாதத்தை, சிங்களத் தலைவர்கள் பலரையும் ஒப்புக்கொண்ட எதார்த்த நிலையை சுமந்திரன் அடிக்கோடிட்டுக் கூறாமல் விட்டார்.

ஏனெனில் அவர் தமிழ், தமிழர், தமிழ்த்தேசியம் என்பவற்றைக் கிஞ்சித்தும் அறியாதவர் கொஞ்சமும் உணராதவர்.

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவே முதற்கட்டமாக அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்துங்கள். விசாரணையைத் தொடங்குங்கள். அவர் வேட்பாளர் இல்லை என்பதை மக்களுக்குத் தெரிவியுங்கள்.

அவருக்கு வாக்களிக்க வேண்டாம் எனத் தமிழ் மக்களிடம் கூறுங்கள்.

வரலாற்றை அறியாத தமிழ் தேசியத்தில் ஊறாத தமிழ்த் தேசியத்தில் ஈடுபாடற்ற ஒருவரை, அகத்தே முரட்டுக் குணத்துடன் கொடிய நோக்கத்துடன் ஓநாயாகிப் புறத்தே ஆட்டுத்தோல் போர்த்திய பொய்யர்களான போலிகளை அடையாளம் கண்டு ஒதுக்குங்கள் என இயேசு பிரான் கூறியதாக மத்தேயு 7:15இல் கூறியதை இங்கு நினைவு கூர்வது பொருத்தம், என்றுள்ளது. (ஒ,5)


# கொரோனாவுடன் வாழப் பழகுவோம்




வைத்திய கலாநிதி. கோ.றஜீவ்
(பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)

## வைத்தியசாலைகளுக்கு செல்லுதல் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டியவை

- கொரோனா நோய்க்கான அறிகுறிகள் தென்படின் ஆலோசனைகளுக்காக 1999 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
- அவசர நிலைமையில் வைத்தியசாலைக்குச் செல்ல 1990 அம்புலன்ஸ் சேவைக்கு அழைக்கவும்.
- அவசிய தேவையின் நிமித்தம் மட்டுமே வைத்திய சாலைக்குச் செல்லவேண்டும்.
- குடும்ப உறுப்பினர் அல்லது உறவினர்கள் வைத் தியசாலையில் இருப்பின் சுகதேகியான ஒருவர் மட்டும் அவரை பார்வையிடச் சென்று வரவேண்டும்.
- மாதாந்த சிகிச்சை நிலையங்களுக்குச் செல்பவர் கள் மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். மருந்துகளைத் தொடர்ச்சியாக எடுக்க வேண்டும்.
- வைத்தியசாலைக்குச் செல்லும்போது சரியான முறையில் முகக் கவசம் அணியவேண்டும்.
- எப்பொழுதும் ஒரு மீற்றர் தூர இடைவெளியைப் பேணுங்கள்.
- வைத்தியசாலைக்குச் சென்று வந்த பின் சரியான முறையில் ஆகக்குறைந்தது 20 வினாடிகளுக்கா வது கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள்.




### தவிர்க்க வேண்டியவை

- தேவையற்ற விதத்தில் வைத்தியசாலைக்குச் செல்லல்.
- வைத்தியசாலைக்கு செல்ல பயத்தில் மருந்து களை எடுக்காமை, நோய் தீவிரமடையும் வரை காத்திருத்தல போன்றவை ஆபத்தானவை.



(தொடரும்)

தபால்மூல வாக்களிப்புக்கு

## கிடைத்த விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மே 13

தபால் மூலம் வாக்களிப்பதற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியாக நியமிக்கப்பட்டிருந்த கடந்த மார்ச் 17 ஆம் திகதிவரை அந்தந்த மாவட்டங்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தையும் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி அறிவித்திருந்தோம்.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன் காரணமாக கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதிவரை கிடைக்கப்பெற்ற தபால் மூலம் வாக்களிப்பு விண்ணப்பங்களை நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விண்ணப்பங்களை உரிய அலுவலகம் அல்லது அரச நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத்திற்குரிய மாவட்டச் செயலகங்கள், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஆகியவற்றிலோ அல்லது இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் தலைமைச் செயலகத்திலோ தமுவல் (மறைக்கப்பட்ட) கடிதத்துடன் நேரடியாக கையளிப்பதற்கு அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அறிவித்தலானது தபால் மூலவாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் புதிய அறிவித்தலொன்றாகவோ அல்லது விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள புதிய திகதியொன்றாகவோ கருதக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாம்!

*அதனைக் கூட்ட முடியாது என்கிறார் பீரிஸ்*

கொழும்பு, மே 13

மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினர் பெரும்பான்மையாக உள்ள பழைய நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவதானது, மக்களின் ஜனநாயக உரிமையை அவமரியாதைக்கு உட்படுத்தும் ஒரு செயலாகும் என்று ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜனாதிபதியின் அதிகாரங்கள் கொண்டு கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டியத் தேவை இன்று கிடையாது. சட்ட ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் அதற்கான இடம் நாட்டில் இன்று கிடையாது. இதனை தெளிவுப்படுத்த நாம் தயாராகவே இருக்கிறோம். அதேநேரம், ஒரு அவசரமான தருணத்தின் போதுதான் ஜனாதிபதியால் நாடாளுமன்றைக் கூட்ட முடியும்.

அதைவிடுத்து அழுத்தங்கள், விமர்சனங்களைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றைக் கூட்ட முடியாது. இவை இலங்கை அரசமைப்பில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. நாட்டில் இதுவரை அவசரகால நிலைமையொன்று பிரகடனப்படுத்தப்படவில்லை.

எனவே, நாடாளுமன்றை கூட்ட வேண்டிய எந்தவொரு தேவையும் கிடையாது. இந்த நிலையில், கீழ் தர அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றைக் கூட்டுமாறு வலியுறுத்தி வருகிறார்கள்.

கடந்த நாடாளுமன்றம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்ட உயிர்கள் உயிரிழக்கவும், மத்திய வங்கியில் கொள்ளை இடம்பெறவும் காரணமாக இருந்த தரப்பினர்கள் தான் அந்த நாடாளுமன்றில் பெரும்பான்மையாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில், நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவதானது மக்களின் ஜனநாயக உரிமையை உடைத்தெறியும் ஒன்றாகத்தான் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (ஒ,5)

## ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு விசாரணையில் இராணுவம்

*சிவில் நிர்வாகத்தில் மற்றொரு தலையீடு*

யாழ்ப்பாணம், மே 13

அரசால் இடர் காலத்தில் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பான விசாரணைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இதற்காக வீடு வீடாகச் சென்று குடும்ப விவரங்களைப் பதிவு செய்வதுடன் குடும்பப் படங்களையும் எடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு வீடுகளுக்கும் செல்லும் இராணுவத்தினர், எத்தனை பேர், பெயர் விவரங்கள், தொழில் போன்றவற்றைப் பதிவு செய்கின்றனர். அத்துடன் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதா என்ற விவரங்களையும் சேகரிக்கின்றனர். மேலும் குடும்ப ஒளிப்படமும் எடுக்கின்றனர். இராணுவத்தினரின் இந்தப் பதிவு நடவடிக்கைகள் மக்களிடையே கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளன. (ஒ,5,105)

1883ஆம் ஆண்டில் றோயல் செஞ்சிலுவை எனும் விருதும், 1904ஆம் ஆண்டில் புனித ஜோன் ஆணைக்குரிய கருணையுள்ள பெண் விருதும், 1907ஆம் ஆண்டில் விக்டோரியா மகாராணியால் பதக்கம் வழங்கியும் மதிப்ப ளிக்கப்பட்டது. இவரே இன்றைய நவீன தாதியத்தின் அன்னையாக உலளாவிய தாதியர்களால் போற்றப்படுகின்றார்.

பி.வி.சிவயோகம்,
தாதிய விரிவுரையாளர்,
தாதிய கல்லூரி, யாழ்ப்பாணம்

# தாதியத்தின் அன்னைக்கு அகவை 200



புளோரன்ஸ் நைற்றிங்கேள்

புளோரன்ஸ் நைற்றிங்கேள் அம்மையார் 1820 வைகாசித் திங்கள் 12 ஆம் நாள் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் வில்லியம் மற்றும் பிரான்ஸிஸ் நைற்றிங்கேள் தம்பதியினரின் இரண்டாவது மகளாகப் பிறந்தார். இலண்டனைச் சேர்ந்த நைற்றிங்கேள் தம்பதியர் தம் குழந்தை பிறந்த ஊரான புளோரன்ஸ் நகரை நினைவூட்டும் முகமாக புளோரன்ஸ் நைற்றிங்கேள் எனப் பெயர் சூட்டினர். அம்மையார் சிறுவயதிலேயே மிகவும் புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும் மிக்கவராகவும் திகழ்ந்தார். இவர் தனது எட்டாவது வயதிலேயே கால் முறிந்த நாய்க்கு பராமரிப்பளித்து குணமாக்கினார்.

தந்தை மீது மிகவும் பிரியம் கொண்டவர் அதனால் தந்தை செல்லும் நாடுகளுக்கெல்லாம் தானும் கூடவே செல்வார். இதனால் பலநாடுகளையும் சேர்ந்த தலைவர்கள், துறைசார் நிபுணர்கள் பலருடன் உரையாடக்கிடைத்தமையால் தந்தை எவ்வளவு புலமையுடன் திகழ்ந்தாரோ இவரும் அவருக்கு நிகரான அறிவைப் பெற்றிருந்தார்.

இவரது வாழ்க்கையின் இலக்கு சிறந்த அரசியல்வாதியாக வரவேண்டுமென்பதாக இருந்தது. இருப்பினும் சமூக நிலைமையும், தொண்டு நிறுவனங்களின் பால் ஏற்பட்ட ஈர்ப்பும் தற்செயலாக அவர் வைத்தியசாலைக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததாலும் அவர் வைத்தியசாலையில் கண்டகாட்சியும் அவரது லட்சியத்தை மாற்றியது. அதாவது இவர் வைத்தியசாலைக்குச் சென்றபோது வைத்தியசாலை வளாகமும் விடுதிகளும் மிகவும் அழுக்காகவும் அசுத்தமாகவும் துர்நாற்றத்துடனும் காணப்பட்டதுடன் நோயாளருக்கான பராமரிப்பு சரிவர செய்யப்படவில்லை. நோயாளரின் பரிதாப நிலையைக்கண்ட அவரது குறிக்கோள் தவிடு பொடியானது. அவர் இது இறைவனது அழைப்பு தாதியத்திற்கே அரசியலுக்கல்ல என எண்ணினார். தனது குறிக்கோளை மாற்றினார்.

**பணபலம் பெற்ற குடும்ப பின்னணி**

இவரது குடும்பம் லண்டனில் மிகவும் செல்வச்செழிப்பும் உயர் அந்தஸ்தும் கொண்ட மேற்தர வர்க்கக் குடும்பமாகும். பெற்றோர் இவரது விருப்பத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் இவரது அழுங்குப் பிடியான பிடிவாதத்தினால் இறுதியில் ஜேர்மனியின் கெய்சர்வேத் நகரில் அமைந்திருந்த தாதிய பாடசாலையில் 3 மாதம் தாதியம் கற்றுத்தேறி நாடு திரும்பிய பின்னர் தாதிய சுப்பிறிண்டன்ற் பதவி வழங்கப்பட்டது. அவர் தனது பொறுப்பை மிகவும் திறமையாக செவ்வனே ஆற்றினார். பதவியில் இருக்கும் போது ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல் போன்ற செயற்பாடுகளில் மிகவும் சாதுரியமாகவும் அதிதிறமையுடனும் செயலாற்றி தனது திறமையை வெளிப்படுத்தினார்.

நாள்கள் உருண்டோட கிருமியன் யுத்தக் களத்தில் காயப்பட்டு உயிருக்குப் போராடும் இராணுவ வீரர்களுக்கு பராமரிப்பளிக்க புளோரன்ஸ் நைற்றிங்கேள் அம்மையார் அழைக்கப்பட்டார். தனது திறமையை உலகறியச் செய்யவும் தாதியம் எனும் தொழிற்துறையின் உன்னதத்தை உலகறியச் செய்யவும் ஏற்ற திருப்புமுனையாக இந்தச் சம்பவம் அமைந்தது.

துருக்கிக்கும் ரஸ்யாவுக்கும் இடையே போர் மூண்டது. துருக்கிக்கு ஆதரவாக பிரான்ஸும் இங்கிலாந்தும் தமது படைகளை அனுப்பின. களத்தில் காயமடைந்தோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. களத்தில் காயமடைந்த ஆயிரத்து 500 நோயாளர்களைப் பிரித்து இவரது பொறுப்பில் ஒப்படைத்தனர். அம்மையார் பொறுப்பெடுக்கும்போது இறப்பு வீதம் 42 ஆகக காணப்பட்டதுடன் நோயளரின் நிலையோ மிகமோசமாகக் காணப்பட்டது. அதிக நெருக்கம், துர்நாற்றம், மாற்றுடையின்மை, உணவின்மை, குடிதண்ணீர் இன்மை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அம்மையார் திகழ்ந்தார். இவர் இரவு வேளைகளில் கையில் விளக்கேந்திச் செல்வதால் ஒரு கவிஞன் இவரை 'விளக்கேந்திய சீமாட்டி' என வர்ணித்துள்ளார்.

இவர் போதிய போசாக்கு உணவுவழங்கி அவர்களின் தற்சுகாதாரம் பேணி, சுத்தமான சூழலைப்பேணி, சுத்தமான உடைமாற்றி, போதிய சுத்தமான குடிநீர் வழங்கி, தொற்றற்றமுறையில் காயங்களுக்கு மருந்



திட்டு, உரியமுறையில் கழிவகற்றி கண்ணும் கருத்துமாக பராமரிப்பளித்ததன் விளைவாக 42 வீதமாக இருந்த இறப்புவீதம் இரண்டு வீதமாகியது. நோயாளர்கள் இவரைக் கடவுளாகப் பார்த்தனர். அவரது நிழலை முத்தமிட்டு நன்றி தெரிவித்தனர். பராமரிப்பை ஆய்வுக்குட்படுத்தி புதியமுறைகளைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் இவர் சிறந்த தாதிய ஆய்வாளராகவும், சிறந்த தாதிய புள்ளிவிபரவியலாளராகவும் புதிய கோட்பாடுகள் அறிமுகப்படுத்தியமையால் சிறந்த கோட்பாட்டாளராகவும் சிறந்த தத்துவவியலாளராகவும் திகழ்கின்றார். இவரே கைகழுவல் மூலம் தொற்றைக் குறைக்கலாம் என உலகுக்கு உரத்துக் கூறியவர்.

**உயிராபத்திலும் விடாத சேவை**

இவ்வாறு சேவைசெய்து வந்தவேளை ஒருவித கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டு உயிராபத்தோடு இருந்தபோதும் குடும்பத்தார் திரும்ப அழைத்தபோதும் தொடர்ந்து சேவையாற்றிய பெருந்தகை. தாதியத்தை பரணிபோற்றும் ஓர் தொழிலாக மாற்றினார். அவரது வழித்தடத்தைப் பின்பற்றி இன்றும் வைத்தியர்கள் அஞ்சி ஓடும் இவ்வேளையில் உலகளாவிய ரீதியில் பல ஆயிரம் புளோரன்ஸ் நைற்றிங்கேள்கள் கொரோனா பராமரிப்பில் தம்மை அர்ப்பணித்துள்ளனர் என்றால் அது மிகையாகாது.

அம்மையார் யுத்தம் முடிவுற்று நாடு திரும்பியபோது இலண்டன் வாழ் மக்களும் படைவீர்களும் அமோக வரவேற்பளித்ததுடன் பொற்கிளியும் வழங்கினர். பொற்கிளியைப் பெறமறுத்ததன் காரணமாக அத்தொகையில் நைற்றிங்கேள் நிதியம் எனும் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியத்தின் உதவியுடன் புனித தோமஸ் வைத்தியசாலையுடன் இணைந்ததாக ஒரு வகுப்பறைக் கல்வியுடன் கூடிய நவீன தாதியக் கல்லூரியை 1860ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். இவர் உலகிலுள்ள வைத்தியசாலைகளை மீளமைக்க பெரும் பங்காற்றினார். இவர் ஒரு சிறந்த தாதிய எழுத்தாளராகவும் திகழ்ந்தார். இவரது சேவையையும் அர்ப்பணிப்பையும் கௌரவப்படுத்த பல விருதுகள் வழங்கப்பட்டன.

1883ஆம் ஆண்டில் றோயல் செஞ்சிலுவை எனும் விருதும், 1904ஆம் ஆண்டில் புனித ஜோன் ஆணைக்குரிய கருணையுள்ள பெண் விருதும், 1907ஆம் ஆண்டில் விக்டோரியா மகாராணியால் பதக்கம் வழங்கியும் மதிப்பளிக்கப்பட்டது. இவரே இன்றைய நவீன தாதியத்தின் அன்னையாக உலளாவிய தாதியர்களால் போற்றப்படுகின்றார். இவரது பிறந்தநாளை சர்வதேச தாதியர் தினமாக உலகளாவிய தாதியர்களால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளைக் கொண்டு கொண்டாடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இந்த ஆண்டுக்கான கருப்பொருள் 'தாதியர்கள் அனைவருக்கும் ஆரோக்கியத்தை வழிநடத்தும் குரல்' என்பதாகும்.

# போராட்டத்தைக் கொச்சைப்படுத்த சுமந்திரனுக்கு அதிகாரம் இல்லை!

## தன்மானமுள்ள தமிழன் ஒருபோதும் யாருக்கும் சோரம் போகவேமாட்டான் என்கிறார் தவராசா

**கொழும்பு, மே 13**

**தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்ப டுத்தும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. அவ்வாறான கருத்துக்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்தி ரன் கூறியுள்ளமை தமிழ் மக்களின் மனதில் ஆறாத காயத்தையும் வேதனையையும் உருவாக்கியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.**

இவ்வாறு இலங்கைத் தழிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு தன்மானமுள்ள தமிழன் ஒருபோதும் யாருக்கும் சோரம் போகமாட்டான். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு ஒரு வரலாற்றுக் காரணி இருக்கின்றது. அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எதிர்த்துப் போராட வேறு வழியின்றி ஆயுதப் போரே முடிவாகியது. தமிழீழ விடுதலைப்புலி கள் மட்டுமின்றி பல்வேறு தமிழ் இயக்கங்கள் தமது மக்களின் விடிவுக்காக ஆயுதப் போராட்டத்துக்குள் தள்ளப்பட்டனர்.

எந்தவொரு மக்கள் போராட்டமும் முதலில் இயக்க ரீதியில் ஆயுதம் தூக்கிய போராட்டமாகவும் பின்பு அதன் தலைவர்கள் அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்வது நெல்சன் மண்டேலாவிலிருந்து வடிவம் பெறுகின்றமை தவிர்க்க முடியாதது. அத்தகைய போராட்டங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி வரை சிறந்த உதாரணங்களாக இருப்பதை சுமந்திரன் அறியாதவரா?

இத்தகைய போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. அவ்வாறான கருத்துக்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளமை தமிழ் மக்களின் மனதில் ஆறாத காயத்தையும் வேதனையையும் உருவாக்கியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கடந்த 08.05.2020 அன்று நேர்காணல் காணொளியில் சுமந்திரன் வழங்கிய செவ்வியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தைத் தான் ஏற்றுக்கொள்ளப்போதில்லை என்று கூறியுள்ளார். அத்துடன் தான் எந்தவொரு அரசியல் கைதிகளுக்கும் (முன்னாள் விடுதலைப்புலிகள்/ ஆதரவாளர்கள்) வாதாடவில்லை என்று கூறியதும், மக்கள் விடுதலை முன்னணிக்காக 1990ஆம் ஆண்டுகளில் வாதாடியதாகத் தெரிவித்ததும் வேடிக்கையானது.

இலங்கையின் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் தானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் மட்டுமே ஏற்றுக்கொள்வதாக நேர்காணலில் அவர் கூறியமை கட்சியின் ஏனைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை வேறுபடுத்திக் காட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

அவருடைய கருத்துக்கள் தனிப்பட்ட கருத்தேயன்றி கட்சியின் கருத்து அல்ல எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறியுள்ள போதும் சுமந்திரனுடைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

நானும் சிங்கள மக்களுக்கு மத்தியில்தான் வாழ்ந்துவருகின்றேன். ஒரு கோழைபோன்று ஒருபோதும் நான் எவ்விதமான கருத்தியலுக்கும் அடிபணிந்து தமிழர் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் அல்லது கொச்சைப்படுத்தும் விதத்தில் சுயலாபங்களுக்காக ஒருபோதும் கருத்து வெளியிட நினைத்தது கிடையாது. ஒரு தன்மானமுள்ள தமிழன் ஒருபோதும் யாருக்கும் சோரம் போகமாட்டான்- என்றார். (எ-22)

# சுமந்திரன் மீது நடவடிக்கையெடுக்க கூட்டமைப்பினருக்கு முதுகெலும்புண்டா?

## சிவாஜிலிங்கம் சவால்

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரனுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது. முதுகெலும்பிருந்தால் சுமந்திரனுக்கு எதிராக கூட்டமைப்பினர் நடவடிக்கை எடுக்கட்டும். இதைச் சவாலாக முன்வை க்கின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இயக்கங்களை ஆதரித்தார்கள். அவர்களுக்கு உதவிகளைச் செய்தார்கள். இந்த வரலாறுகள் தெரிந்தும் தெரியாதது போன்று சுமந்திரன் கருத்துக்களைக் கூறி வருகின்றார். அவருக்கு வரலாறு தெரியாவிட்டால் நான் வகுப்பெடுக்கத் தயாராக இருக்கின்றேன்.

சுமந்திரன் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குகின்றார். இவர் புலிகளையும் எங்கள் தேச விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்துவது தற்செயலாக நடந்தது இல்லை. திட்டமிட்டு செய்து வருகின்றார். சுமந்திரனைக் கண்டித்த ரெலோவின் தலைவர் செல்வம், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழ் அரசுவின் தலைவர் மாவை. உள்ளிட்டோரைப் பாராட்டுகின்றேன். ஆனால் அவர்கள் சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். இந்த விடயம் இன்னும் கொஞ்ச நாளில் அடங்கி விடும். தமிழ் அரசுக் கட்சியும் சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது. அவரிடமிருந்து பேச்சாளர் பதவியையும் பிடுங்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் சுமந்திரனிடம் ஏதோ ஒருவகையில் கடமைப்பட்டிருக்கின்றார்கள். சுமந்திரனுக்கு எதிராக துரும்பைக் கூட இவர்களால் அசைக்க முடியாது.

எமது போராட்டம் வன்முறைப் போராட்டம் அல்ல. அது தேசிய விடுதலைக்கான போராட்டம். தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலை இல்லை என்று சுமந்திரன் சொன்னதும், ஐ.நாவில் இலங்கையைக் காப்பாற்ற கால அவகாசம் பெற்றுக் கொடுத்ததும் இதற்காகத்தானா? சுமந்திரன் கூட்டமைப்பிலிருந்து மாத்திரமல்ல தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்தும் தூக்கி எறியப்படவேண்டியவர்,- என்றார். (ஒ,5)

# அயோக்கியரின் கடைசிப் புகலிடம் அரசியல் என்பதை நிரூபித்து விட்டார் சுமந்திரன்

## எஸ்.சிவகரன் தெரிவிப்பு

மன்னார், மே 13

வடக்கில் ஒரு கதை தெற்கில் இன்னொரு கதை தமிழில் ஒன்று சிங்களத்தில் வேறொன்றாக இன விடுதலை அரசியலை வணிகமாக்கிவிட்டார்கள் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் மக்களின் சுவாசமாக இருக்கும் தலைவர் பிரபாகரனிசத்தை எள்ளி நகையாட கொள்ளிவால் பேயாகவுள்ள சிங்களத்தின் எடுபிடி கைக்கூலி வழிப்போக்கன் சுமந்திரனுக்கு, என்ன அருகதையுண்டு. சிங்களவர்களோடு சுகபோகத்தை அனுபவித்து விட்டு, சந்தர்ப்பவாதி சம்மந்தனின் கையாளாக உட்புகுந்து முதுகெலும்பில்லாத மாவை சேனாதியாலும் வக்கற்ற பங்காளிக் கட்சிகளாலும் திறனற்ற சக நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஒட்டு மொத்த பலவீனத்தின் மொத்த வடிவமே சுமந்திரனின் நிரலான தமிழ்த்தேசிய நீக்கவாதங்கள். பிரபாகாரனிசமே புலியிசம், புலியிசவாதத்தின் நீட்சியே இன்றைய தமிழ்த் தேசிய வாதம். வரையறுக்க முடியாத எண்ணிலடங்காத செயற்கரிய செயலாற்றிய விடுதலை வீரர்களை இகழ்ந்துரைக்க எட்டப்பன்களால் எப்படி முடியும். இதற்குப் பின்னும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மக்கள் சுமந்திரனுக்கு வாக்களிப்பார்களானால் அவர்கள் தமிழர்கள் இல்லை. தமிழர் தாயகத்தில் வசிக்க தகுதி அற்ற துரோகிகளாகவே கருதப்படுவார்கள்.

காலத்திற்கு காலம் சந்தர்ப்பவாதிகளும் போக்கிலிகளும் தமிழ் தரப்பில் தோன்றிய வண்ணமே உள்ளனர். இடத்துக்கு ஏற்றவாறு பச்சோந்தித்தனமாக மாற்றி மாற்றிப் பேசுவதில் சுமந்திரன் அரசியல் கோமாளி ஆகிவிட்டார். வடக்கில் ஒருகதை தெற்கில் இன்னொரு கதை, தமிழில் ஒன்று சிங்களத்தில் வேறொன்று என இன விடுதலை அரசியலை வணிக மாக்கிவிட்டார்- என்றுள்ளது. (ப-56)

# தமிழர்களை தேர்தலில் ஏமாற்றவே கூட்டமைப்பு மகிந்தவை சந்தித்தது

## முன்னாள் எம்.பி சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

பொதுத்தேர்தலில் மகிந்த வாக்குறுதி அளித்ததாக தமிழ் மக்கள் மத்தியில் பொய்ப்பரப்புரை செய்து வாக்குகளை அறுவடையாக்கி தமது அரசியல் இருப்புக்களை தக்க வைப்பதற்காகவே பிரதமர் மகிந்தவின் அழைப்பை கூட்டமைப்பு ஏற்றதோடு தனிப்பட்ட சந்திப்பிலும் ஈடுபட்டது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திகுறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;.

போர் நிறைவுக்கு வந்து தசாப்தத்தினை கடந்துள்ள போதும் தமிழர் தாயகத்தில் வாழ்வாதார தேவைகள் மிகவும் உயர்ந்த மட்டத்திலேயே இருந்தது. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல வறுமையின் கோரப்பிடிக்குள்ளேயே இருந்தன. எனினும் கடந்த பத்து ஆண்டுகளில் இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்து போர் வெற்றியைக் கூறி மார்பு தட்டிய மகிந்த அரசோ அல்லது கூட்டமைப்புடன் தேனிலவு கொண்டாடிய மைத்திரி-ரணில் கூட்டரசோ இந்த நிலைமை மாற்றுவதற்கான எந்த அடிப்படைகளையும் முன்னெடுப்பதற்கு தயாராக இருந்திருக்கவில்லை.

முதலாவதாக பொதுத்தேர்தலொன்று நடைபெறுவதாக இருந்தால் அதற்கான சுமூகமான புறச்சூழல்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக பொதுமக்கள் தமது ஜனநாயக கடமையை அச்சமின்றி நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாடான சூழலொன்று ஏற்பட வேண்டும். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுகின்ற நிலையில் பொதுத்தேர்தலை நடத்தவதற்கு நாம் ஆட்சேபம் தெரிவிக்கப்போவதில்லை. அதுவே தேர்தல் தொடர்பான நிலைப்பாடாக இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் மகிந்தவுடனான சந்திப்பில் பங்கேற்றமைக்கான உண்மையான காரணம் அவர்களது மனச்சாச்சாட்சிக்கே வெளிச்சம். ஆனால் மகிந்தவின் அரசியல் நாடகத்துக்குள் சிக்குண்டுகொள்வதற்கும் எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படாவொரு காட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு நாம் தயாராக இல்லை. மேலும், நாட்டில் அரங்கேறிய இனப்படுகொலைக்குப் பொறுப்புக்கூறவே மாட்டோம் என்றும், காணாமல்போனவர்கள் காணாமாலாக்கப்பட்டவர்களாக இருப்பர் என்றும் அரசியல் கைதிகள் என்று யாருமில்லை என்றும் ஒட்டுமொத்தமாக இனப்பிரச்சினையே இந்த நாட்டில் இல்லை பொருளாதார பிரச்சினையே இருக்கின்றது என்று கூறும் ராஜபக்சவினரிடத்தில் சென்று கை குலுக்குவதால் என்ன நடக்கப்போகின்றது.

அவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருடான அனைத்து நாடாளுமன்ற உறுப்பிணர்கள் கூட்டம், மற்றும் தனிப்பட்ட பிறிதொரு சந்திப்பு ஆகியவற்றில் கலந்து கொண்டது. இதில் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஆகக்குறைந்தது ஒரு தீர்மானத்தனையோ அல்லது இணக்கப்பாட்டினையோ எடுத்தது என்றோ அடுத்து வரும் நாள்களில் அது நடைமுறையாகுமென்றோ கூற முடியுமா?- என்றார் (ப-110)

# சுமந்திரனுக்கு கைகொடுக்கிறார் ஆனந்தசங்கரி

விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டாம் எனப் போராட்டம் நடத்திய ரெலோவும், விடுதலைப் புலிகளை சுட்டுக்கொன்ற ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினருக்கும் புலிகள் மீது எப்படிப் புதிதாக பற்று வந்தது என்று ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.
கிளிநொச்சியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், காலம் கடந்தாலும் சுமந்திரன் உண்மைகளை தற்போது வெளியிட்டுள்ளமை பாராட்டத்தக்கது என்று கூறியுள்ளார்.
விடுதலைப்புலிகள் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கருத்துக்களாக அமைந்தாலும், சம்பந்தன் தொடர்பாக அவர் உண்மைகளை காலம் கடந்தாலும் வெளிப்படுத்தியுள்ளார் அதனை பாராட்டியே ஆகவேண்டும். சம்பந்தன் கூறும் அத்தனைக்கும் தலை அசைத்துவந்தாலும், தொடர்ந்தும் அவருடன் பயணிக்க முடியாது என்ற நிலை சுமந்திரனுக்கு ஏற்பட்டுள்ளது.
இந்த உண்மைகளை சுமந்திரன் 6 ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்திருக்க வேண்டும். ஆனாலும் தற்போது குறித்த உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது என அவர் தெரிவித்தார்.
இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப்.பினர் கருத்துக்கள் தெரிவிப்பது தற்போதுள்ள நிலையில் தமது சுயலாபத்துக்காகவே என்றும் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

# சுமந்திரனை விவாதத்துக்கு அழைக்கிறார் சுகாஸ்

தமிழினத்தின் கடவுளான தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையோ அல்லது அவரது புனிதமான விடுதலைப் போராட்டத்தையோ கொச்சைப்படுத்த தமிழினத் துரோகி மதியாபரணம் ஆபிரஹாம் சுமந்திரனுக்கோ அல்லது அவர் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கோ கிஞ்சித்தும் அருகதையில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்த ரணி கனகரட்னம் சுகாஷ் தெரிவித்தார். பகிரங்க விவாதத்திற்கு வருமாறும் அவர் சுமந்திரனுக்கு அழைப்பு விடுத்தார்.
இவ்வாறான கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சுமந்திரனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்குகளால் பதிலடி கொடுக்க தமிழ் மக்கள் தயாராக வேண்டும் என்று தெரிவித்த அவர் "சுமந்திரன் அவர்களே தேசியத் தலைவரின் ஆயுதப் போராட்டம் சரியா? தவறா? என்ற பகிரங்க விவாதத்துக்கு நான் தயாராகவே இருக்கிறேன். ஆகவே என்னுடன் நீங்கள் அந்த விவாதத்துக்கு வரத் தயாரா?" என்றும் சவால் விடுத்துள்ளார். (ப-20)

# ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்று அதை யாரும் கொச்சைப்படுத்த முடியாது

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 13



**விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் என்பது தவிர்க்க முயாத ஒன்றாக இருக்கின்றது .ஆகவே அந்த ஆயுதப் போராட்டத்தை எவராவது கேலி செய்வதோ கொச்சைப் படுத்துவதோ விமர்சிப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
எமது கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்தி ரன் தொடர்பாக சிங்கள ஊடகமொன்றில் வெளிவந்த கருத்து தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் வெளியிடப்பட்டுவருவதைக் காண முடிகின்றது. அந்தச் சிங்கள ஊடகத்தில்சுமந்திரன் கூறிய கருத்து தொடர்பாக பல தமிழ் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பல்வேறு கருத்துக்களை தொடர்ச்சியாகப் பார்க்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்பாகவும் தலைவர் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாகவும் பல கருத்துக்களை அவர் கூறியிருக்கின்றார். விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக அவர் அவ்வாறான கருத்துக்களை கூறியிருப்பாராயின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.
உண்மையில்ஒருஆயுதப்போராட்டத்தின் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இன்றுவரை அது ஜனநாயகரீதியாக அரசியல் பணியைச் செய்துகொண்டிருக்கின்றது. அந்த ஆயுதப் போராட்டத்தின் நிமித்தமாகவே புலம்பெயர்ந்து வாழ்கின்ற பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்று அங்கிருந்து ஏதோவொரு வகையிலே தமிழ் மக்களுக்கு பல உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.
விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. ஆகவே அந்த ஆயுதப் போராட்டத்தை எவராவது கேலி செய்வதோ கொச்சைப்படுத்துவதோ விமர்சிப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்றும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கருத்தை கூறியிருக்கின்றார்.
விடுதலைப் புலிகள் மௌனித்ததன் பிற்பட்ட காலப் பகுதியில் அவர்களுடன் எங்களுக்கு சம்பந்தமில்லை என்று கூறுவதையோ மாற்றுக் கருத்துகளைக் கூறுவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. சுமந்திரனின் தனிப்பட்ட கருத்தாகவே நான் அதனைப் பார்க்கின்றேன். சிலர் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகவே சித்தரிக்கின்றனர். ஆயுதப் போராட்டத்தை தான் ஒருபோதும் ஏற்றுக்கொள்பவனில்லை என்றும் ஸ்ரீலங்காவின் தேசியக் கொடியை, தேசிய கீதத்தை தான் ஏற்றுக்கொள்பவன் என்றும் அவர் கூறியிருக்கின்றார். அவர் ஏற்றுக்கொள்வதென்பது அவரின் தனிப்பட்ட கருத்தாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என சமூக வலைத்தளங்களில் கருத்துகள் வெளியிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.
இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினை சென்றிருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டமாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு கிழக்கில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மாவீரர்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். அவர்களின் பெற்றோர்கள் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களின் தியாகங்களை நாங்கள் கொச்சைப்படுத்த முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் காரணமாகவே தமிழர்கள் இன்று தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தமில்லை, அல்லது அதுதொடர்பில் அக்கறையில்லை என்று கூறுபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகளை அல்லது போராளிகளை அல்லது மாவீரர்களை உதாசீனம் செய்யும் விதமாக கருத்துகள் கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.
(ப-150)

# புலிகளுக்கு எதிரான கருத்துக்களை சுமந்திரன் நிறுத்தியாக வேண்டும்

## கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கண்டனம்

மட்டக்களப்பு. மே 13
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கூறும் கருத்துக்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தவராசா கலையரசன் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனால் கொடுக்கப்பட்டுள்ள நேர்காணல் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் இந்த நாட்டில் பல இன்னல்களைச் சந்தித்த வேளை அதற்கு ஈடு கொடுக்க முடியாத சூழ்நிலையில் பெரும்பான்மைத் தலைவர்களால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைக்கு எதிராகவே தமிழ் மக்கள் ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். அந்தப் போராட்டத்துக்கு இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல புலம்பெயர் தமிழர்களும் வலுச் சேர்த்திருக்கிறார்கள். அந்தச் சிந்தனையின் ஊடாகவே தமிழ் மக்கள் கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தேர்தல்களில் ஆதரித்து தங்களின் குரலாக நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவே அனுப்பியிருந்தார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இன்று தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மிகவும் மனவேதனையுடன் இந்த நாட்டில் ஒரு நலிவுற்ற இனமாக தொடர்ந்தேர்ச்சியாக பார்க்கின்ற நிலையில் இந்த காலத்தில் வெளியிடப்பட்ட கருத்தானது தமிழ் மக்களின் மத்தியில் பெரும் அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது.
இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருப்பினும் சிங்கள கடும்போக்குவாதத் தலைவர்கள் கூட விடுதலைப் புலிகளின் தலைவர்களை விடுதலைப் புலிகளையும் உயர்வாகப் பார்க்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடமிருந்து இந்த கருத்துக்கள் வருவது மிகவும் கண்டனத்துக்குரியது - என்றார். (ப)

# சிங்கள மக்களிடம் சுமந்திரன் வாக்குகளை பெற்றிருக்கலாமே!

## அனந்தி சீற்றம்

கிளிநொச்சி, மே 13
விடுதலைப்புலிகளையும் தமிழர் தியாகங்களையும் வைத்து வாக்குப் பெற்றுவிட்டு பிரபாகரன் ஆயுதம் ஏந்திப் போராடியது தவறு என்றால் சுமந்திரன் சிங்கள மக்களிடம் வாக்குகளைப் பெற்றிருக்கலாம் என அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
விடுதலைப்புலிகளையும், தமிழரின் தியாகங்களையும் பயன்படுத்தி அதன் மூலம் வாக்குகளைப் பெற்றுவிட்டு பிரபாகரன் ஆயுதம் ஏந்திப் போராடியதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் குறிப்பிட்டிருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறாயின் அவர் ஐந்து வயதிலிருந்து பழகிய சிங்கள மக்களிமிருந்து வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் போயிருக்கலாம்.
தந்தை செல்வாவினுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரையான போராட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளாத ஒருவராகவே காட்டிவிட்டு வாக்குகளுக்காக போராளிகளின் தியாகங்களையும் தமிழர்களின் அர்ப்பணிப்புக்களையும் பயன்படுத்தி வாக்குகளைப் பெற்றுள்ளார் -என்றார். (ப-6)

# இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

## விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை நடைபெற்று வரும் நிலையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கால்நடைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது. இதே வேளை அவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்பட்டாலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவை இல்லாத நிலை தொடர்ந்து வருகின்றது ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் கால்நடை உரிமையாளர் பலர் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்த்தாலும் மேய்ச்சல் தரவை இல்லாத நிலையில் வயல் வெளிகளில் உள்ள புல்களை அறுத்து உணவாகக் கொடுத்தும் வருகின்றார்கள்.

கால்நடைகளைப் பட்டிகளாக வளர்ப்பவர்கள் மேய்ச்சலுக்கு ஆள்கள் வைத்து மேய்ச்சல் தரவை இல்லாத நிலையிலும் மாடுகளை மேய்ச்சலுக்கு விடுகின்றனர். கிராமங்களில் மக்களின் வீடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் பல அவிழ்த்து விட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று விவசாயச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட் இரண்டு மாத காலப்பகுதியிலும் மக்கள் வீட்டுத்தோட்டங்க ளையும் விவசாயச் செய்கைகளையும் அதிகளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் மக்களின் வீடுகள் தோறும் வீட்டுத்தோட்டச் செய்கை பண்ணிவருகின்றார்கள்.

இந்நிலையில் விவசாயச் செய்கையாளர்களும் நிலக்கடலை, பூசணி, கௌப்பி, பயறு, பயிற்றை, கறிமுளகாய், கத்தரிக்காய், வாழைத்தோட்டம், உள்ளிட்ட சிறு தானியங்களைச் செய்கை பண்ணி வருகின்ற நிலையில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பாக புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு விசுவமடுப் பகுதிகளில் வீதிகளில் அதிகளவான கால்நடைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் வீதியில் செல்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். கால்நடை வளர்ப்பவர்கள் பலர் தங்கள் கால்நடைகளை அவிழ்த்து விடுவதால் அதனைக் களவாக இறைச்சிக்காக வெட்டும் சம்பவங்களும் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. கால்நடைகளை இறைச்சிக்காக திருடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது இதனால் கால்நடைகளை எவ்வாறு வளர்ப்பது என்று தெரியாத நிலையில் கால்நடை வளர்ப்போர் ஏங்கி வருகின்றார்கள். எனவே கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை கட்டிவளர்த்தால் கால்நடைகள் களவாடப்படுவதில் இருந்து தவிர்க்கப்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ப-19)

# குழாய் நீரில் நெற்செய்கை வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா,மே 13

**ஜப்பான் நாட்டைப் பின்பற்றி இலங்கையில் குழாய் மூலம் நெற்செய்கைக்கு நீர் வழங்கும் திட்டம் முதன் முதலாக வவுனியாவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.**



வவுனியா, சாம்பல் தோட்டம் குளப்பகுதியில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ. விஜயகுமார் தலைமையில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

சாம்பல் தோட்டம் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளின் பின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.எம்.பீ.வீரசேகர மற்றும் மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன ஆகியோர் இணைந்து திட்டத்தை ஆரம்பித்தனர். ஜப்பான் நாட்டில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திச் சிறப்பான நீர் முகாமைத்துவத்தின் கீழ் விவசாய செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த முறையைப் பின்பற்றி இலங்கையில் முதன்முதலாக வவுனியா சாம்பல்தோட்டம் குளத்தில் இருந்து குழாய் வழியாக விவசாய நடவடிக்கைளுக்கு நீர் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 48 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டம் மூலம் 75 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

காலபோகத்தில் 59.5 ஏக்கரும், சிறுபோகத்தில் 15 ஏக்கரும் செய்கை பண்ணப்பட்டு வரும் நிலையில், இந்தத் திட்டத்தின் மூலம் 75 ஏக்கர் வரை காலபோக்கத்திலும், 30 ஏக்கர் வரை சிறுபோகத்திலும் நெற் செய்கை பண்ணக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாம்பல் தோட்டம் குளத்தில் இருந்து கால்வாய்களைப் பயன்படுத்தாது குழாய் மூலம் நீர் வயல் நிலங்களுக்கு நீர் விநியோகிப்பதால் நீர் வீண்விரயம் செய்யப்படுவது தடுக்கப்பட்டு விளைநிலப்பரப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் வவுனியா மாவட்டத்தின் கோவில்குளம், வவுனியா வடக்கு நாகர் குளம் ஆகிய இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-18)

## மாணவர்களின் வீடுகளுக்கு பாடத்திட்டங்கள் விநியோகம்

சாவகச்சேரி, மே 13

தென்மராட்சி கல்வி வலயத்தினரால், மாணவர்கள் வீட்டிலிருந்து கற்பதற்கான பாடத்திட்டங்கள் அச்சிட்டு அதிபர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கான கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகியபாடங்களுக்குரிய பயிற்சிப் பாடத்திட்டங்களைத் தயாரித்து அச்சிட்டு வருகின்றனர்.

அச்சிடும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதால், அடுத்த வாரம் அனைத்து மாணவர்களுக்கும் அதிபர் ஊடாக விநியோகிக்கப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

கைபேசி வசதி இல்லாத மாணவர்களுக்காகவும் சூம் (Zoom) பயிற்சியை அனைத்து மாணவர்களுக்கும்பகிர்ந்துகொள்ள முடியாதெனக் கருதியும், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் நலன்விரும்பிகளின் நிதிப் பங்களிப்பில் பயிற்சித் தாள்கள் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (க-9)

# ரயிலில் பயணிக்க 2,800 விண்ணப்பங்கள்

கொழும்பு, மே 13

ரயிலில் பயணம் செய்வதற்காக அரச மற்றும் தனியார் துறை ஊடாக இதுவரையில் 2 ஆயிரத்து 800 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளதாவது:

ஒவ்வொரு நாளும் 5 நிறங்களை அடிப்படையாகக் கொண்ட அட்டை வழங்கப்படும். இதனைப் பயணிகள் பயணச் சீட்டாகப் பயன்படுத்த முடியும்.

வழங்கப்படும் பயண அட்டை ஒரு வாரத்துக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஒரு வாரத்துக்குப் பின்னர் நிறுவனம் ஊடாக மீண்டும் பதிவு செய்ய வேண்டும்.

ரயில்சேவையைப்பயன்படுத்தப்பதிவு செய்யாதவர்கள் ரயில் நிலையங்களுக்குள் உட்பிரவேசிப்பதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அத்துடன்பயணிகள்கட்டாயம்சுகாதாரமற்றும்பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்-என்றார். (க)

## தொடர்ச்சிகள்...

### சகலருக்குமே...

துரையாடலில், அனைத்து பிரஜைகளினதும் தனிப்பட்ட தகவல்களை வாழ்நாளில் ஒரே முறை பெற்றுக்கொண்டு வழங்கப்படவுள்ள தனித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் அடையாள அட்டைகளின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி வினவியுள்ளார்.

புதிய அடையாள அட்டையின் மூலம் தனிப்பட்ட தகவல்களை பௌதீக ரீதியாகவும் இணையத்தின் ஊடாகவும் பார்க்க முடியும். மிகச் சரியான தரவுகளுடன் கூடிய புதிய அடையாள அட்டைகள் பல்வேறு சட்டங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகவல்களை உள்ளடக்கியுள்ளன.

விமானப் பயணங்கள், சாரதி அனுமதி பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடக்கம் ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவு, வருமான வரி மற்றும் வாக்களிப்பு உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படக் கூடிய உயிர்த் தகவல்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதி முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்தபோது 2012 ஆம் ஆண்டு டிஜிட்டல் அடையாள அட்டைகளின் தேவை குறித்து முன்மொழிவு வைத்திருந்தார் என்றும் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. புதிய அடையாள அட்டைகளைத் தயாரிக்கும் பணி நிபுணர் குழுவொன்றின் கீழ் தகவல், தொழிநுட்ப நிறுவனத்தின் முழுமையான வழிகாட்டலின் கீழும் ஜனாதிபதி செயலணியொன்றின் கண்காணிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று மேலும் குறிப்பிடப்பட்டது. (த)

### தென்னை...

தெரிவித்தார்.

சுதேச சந்தையையும் ஏற்றுமதியையும் இலக்காகக்கொண்டு தென்னைப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு நாட்டின் பெருந்தோட்ட பயிர் ஏற்றுமதி வருமானம் 538 பில்லியன் ரூபாவாகும். 2022ஆகும் போது அதனை 753 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பது தனது அமைச்சின் எதிர்பார்ப்பு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் பெருந்தோட்டத் துறை பற்றி நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை குறித்த பகுதிகளில் பலவருடங்களாக தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இப்போதுதான் அங்கு தென்னை மரங்களைப் பயிரிட்டு வெற்றியளித்துள்ளமை போன்று அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# முதியோருக்கான இடர்கால கொடுப்பனவுகளில் மோசடி

## வவு. மாவட்டச் செயலரிடம் முறைப்பாடு

வவுனியா, மே 13

வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோவிற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 ஆயிரம் ரூபா முதியோர் கொடுப்பனவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று வவுனியா மாவட்டச் செயலரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

நாளைய தேசம் மக்கள் குறைகேள் அமைப்பி னர் நேற்று மாவட்டச் செயலரிடம் இந்த முறைப் பாட்டை வழங்கினர்.

கோவிற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 ஆயி ரம் ரூபா முதியோர் கொடுப்பனவைப் பெறு வதற்குச் சென்ற முதியவர் ஒருவருக்கு அந்தக் கொடுப்பனவை வழங்காத கிராம அலுவலர் இந்தப் பணம் இராணுவத்தினரிடம் அனுப்பப் பட்டுள்ளது அங்கு சென்று பெற்றுக் கொள்ளு மாறு கூறியுள்ளார். அந்தப் பணத்தை முதியவர் பெற்றுள்ளார் என்று பிரதேச செயலக கணக் கறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பயனாளிக்கு அக் கொடுப்பனவு கிடைக்கப்பெற வில்லை. எனவே இவ்விடயத்தில் உரிய தீர் வைப் பெற்றுத்தரவேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; குறித்த கிராம அலுவ லர்தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ஐ-18)

## தனிமைப்படுத்தலில் இருந்து 32 பேர் விடுவிப்பு



வவனியா, மே 13

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத் தல் முகாமில் கொரோனா தொற்று பரி சோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டி ருந்த32பேர்நேற்றுவிடுவிக்கப்பட்டனர்.

வெலிசறைக் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடைய பலர் தனி மைப்படுத்தப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பீ.சி. ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப் பட்ட நிலையில் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த 32 பேர் பம் பைமடு இராணுவ வவுனியா, மகாகச்ச கொடி, அனுராதபுரம், ஹொரவப்பொத் தானை, மதவாச்சி உள்ளிட்ட பகுதிக ளைச் சேர்ந்த 32 பேரே இவ்வாறு விடு விக்கப்பட்டனர்.

இவர்கள் இராணுவ பாதுகாப்புடன் பஸ் களில் அழைத்து செல்லப்பட்டு அவர்க ளது சொந்த இடங்களுக்கு கொண்டு சென்று விடுவிக்கப்பட்டனர். (ஐ-18)

## கலந்துரையாடல்

பருத்தித்துறை, மே 13

பருத்தித்துறை. சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகப் பிரிவுக்குட்பட்ட பகு திகளில் இயங்கிய சிகை அலங்கரிப்பு நிலையங் களை மீளத் திறப்பது தொடர்பிலான கலந்து ரையாடல் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் நேற் றுமுன்தினம் நடை பெற்ற கலந்துரையாட லில் பிரதேசத்தைச் சேர்ந்த 43 சிகை அலங் கரிப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை பிரிவு 11 பொது சுகாதார பரிசோத கர் இ.ஜென்சன் றொனா ல்டினால் கொரோனா தொற்று தொடர்பில் விளக் கமளிக்கப்பட்டது. (ஐ 9)



## கட்டாக்காலி மாடுகள் மடக்கிப் பிடிப்பு

### வவுனியா நகரசபை அதிரடி

வவுனியா,மே 13

போக்குவரத்துக்கு இடையூறாக காணப் பட்ட 40க்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடு களை வவுனியா நகரசபையினர் பிடித்துள் ளனர். வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதி களில் வீதிகளில் கடந்த சில நாள்களாக கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிக ரித்துக் காணப்பட்டதுடன், இதனால் வீதி விபத்துக்களும் ஏற்பட்டிருந்தன.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை வவுனியா நகர், வைரவப்புளியங்குளம், குருமன்காடு, யாழ் வீதி போன்ற பகுதிக ளில் 40 க்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடு கள் பிடிக்கப்பட்டன. பிடிக்கப்பட்ட மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 600 ரூபா, தண்டம் 1000 ரூபா, ஒரு நாள் பரா மரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற்றினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என நகரசபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-18)



## படையினரின் வாகனம் விபத்து

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் நேற்று படையினரின் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானது. வாகனத்தில் பய ணித்த எவருக்கும் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட் டது.

வீதி வளைவில் திருப்ப முற்பட்டபோது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் குறித்த வாகனம், கழிவு நீர் வழிந்தோடு கின்ற வாய்க்காலுக்குள் வீழ்ந்து விபத் துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்து தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-246)

# இடர்நிலைமைகளை விளங்கி பின்வாங்காது செயற்படுங்கள்

## செயலணிக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 13

மக்களின் இயல்பு வாழ்க்கையையும், பொருளாதாரத்தையும் செயற்திறனா கப் பேணி கொவிட் -19 ஒழிப்புக்காக சளைக்காத தைரியத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. முன்னால் உள்ள இடர்நிலைமைகளை விளங்கி பின் வாங்காது செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ செய லணியிடம் வலியுறுத்தினார்.

கடற்படை மற்றும் வாழைத்தோட்டப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் கொரோனா நோய்த்தொற்றுடையவர் கள் உருவாக என்ன காரணம் என்ப தைக் கண்டறிந்து பரிசோதனைக ளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் தொடர்பாக, கொவிட் -19 ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாட லின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊட கப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது;

பஸ், முச்சக்கர வண்டிகள் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்ப டும் தளங்கள், மெனிங் சந்தை போன்ற மக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களில் உள்ளவர்களை அடிக்கடி எழுமாறாகப் பரிசோதனைக்கு உட்ப டுத்த வேண்டியது அவசியம். வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு இத்தகைய இடங்களில்ஒன்றுகூடுபவர்களுக்குஅறி வூட்ட வேண்டியதும் அவசியம் என ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்த வழிகாட்டல் சுகாதார அமைச்சால், கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள் ளது. அந்தப் பரிந்துரைகளின் படி பாடசாலைகளைத் திறக்கக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத் தப்பட்டது.

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஊடகங்களின் வாயிலாக பிள்ளைகளுக்கு விரிவாக அறிவூட்ட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப் பிட்டார். வெளிநாடுகளில் கல்வி கற்ற மாணவர்கள் மற்றும் தற்காலிக விசாக்களையுடைய 3 ஆயிரத்து 297 பேர் தற்போது அழைத்து வரப் பட்டு நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வெளிநாடு களில் உள்ளவர்களை நாட்டுக்கு அழைத்து வரும் போது. நாட்டுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் கட்டுப்பாட் டுடன் அதனைச் செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்ட விரோத மதுபான பாவனை கார ணமாக ஏற்படும் சுகாதாரப் பிரச்சினை களுடன், கிராமிய மக்கள் வாழ்க்கையி லும் பல்வேறு பிரச்சினைகள் உருவா கியுள்ளன. அதிக விலையில் சட்டவி ரோத மதுபானம் விற்பனை செய்யப் படுவதும் தெரியவந்துள்ளதாக பாது காப்பு துறையினர் சுட்டிக்காட்டினர். இதன் மூலம் ஏற்படும் இடர் நிலைமை குறித்து சுகாதார அதிகாரிகளால் விரி வாகக் கலந்துரையாடப்பட்டது.

வீடுகளில் இருக்க வேண்டியிருந்த தால் நகரப்புற மக்களின் வாழ்க்கையி லும் பெரும் அழுத்தங்கள் ஏற்பட்டுள் ளன. இது போன்ற நிலைமை களைத் தவிர்ப்பதற்கு சுகாதாரப் பரிந்துரைக ளின் படி நிகழ்ச்சித்திட்டங்களை நடை முறைப்படுத்த வேண்டியதன் அவசி யம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. உடல் ஆரோக்கியத்துக்காக உடற்ப யிற்சிகள் மற்றும் ஏனைய உள ஆரோக்கியச் செயற்பாடுகளையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தரவுகளை ஒரு முறைமைக்குள் கோவைப்படுத்தி, கடவுச் சீட்டுகள் மற் றும் அடையாள அட்டைகளை மாவட் டத்தில் வழங்குவதை விரைவு படுத்த முடியுமா என்று ஜனாதிபதி வினவினார். விவசாய அறுவடைகளை நீண்ட நாள் வைத்திருப்பதற்கான தொழிநுட் பம் மற்றும் முகாமைத்துவ முறைமை களை மீண்டும் ஆராய்ந்து தேவைக்கு ஏற்ப பயன்படுத்துமாறும் செயலணி யிடம் தெரிவித்தார்-என்றுள்ளது. (க)

## சமுர்த்திக் கொடுப்பனவு வங்கிக்கு

சாவகச்சேரி,மே 13

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளி களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு, அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பி லிடப்பட்டுள்ளன என்று பிரதேச சமுர்த்தி அலகின் தலைமைப்பீட முகாமையாளர் இ.அன்ரனி தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் 17 ஆயிரம் சமுர்த்தி குடும் பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங் கும் நடவடிக்கை துரிதகதியில் மேற்கொண் டதால், அந்த மாதத்தில் மாதாந்த சமுர்த்தி உதவு தொகை வழங்கப்படவில்லை.

இருப்பினும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவ லர்கள் ஊடாகப் பயனாளர்களுக்கு அறி விக்கப்பட்டு பலர் சமுர்த்தி வங்கிகளில் உதவு தொகையைப் பெற்று வருகின்றனர். சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் எதிர்வ ரும் 17 ஆம் திகதி தொடக்கம் வழங்க நடவ டிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட அலுவ லகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற் கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## மேல்நீதிமன்றம், வவுனியா
## கேள்வி அறிவித்தல்

வவுனியா. மன்னார் மற்றும் கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன. அத்துடன் முல்லைத்தீவு வளாக சுத்திகரிப்பு வேலைக்கான முடிவு திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமை (COVID19) காரணமாக 20.05.2020 வரை நீடிக்கப்படுகின்றது.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும். மேலதிக விவரங்களையும் வவுனியா மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும். மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ.10000/= ஐயும் செலுத்தி 20.05.2020 புதன்கிழமை 1.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 20.05.2020 பி.ப 01.00 மணிவரை ஆகும். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 2.00 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு:** (அந்தந்த மாவட்டங்களுக்குரிய சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

R.கண்ணன்
தவிசாளர்/மேல் நீதிமன்ற நீதிபதி.
மேல் நீதிமன்ற கேள்விச் சபை.
மேல் நீதிமன்றம்.
வவுனியா.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 03 . 10 . 1983



உதிர்வு 13 . 04 . 2020

### அமரர் இராமராசா மயூரன்

**(சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-அச்செழு)**

கடந்த (13.04.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்பிற்குரிய சகோதரர் அமரர் இராமராசா மயூரன் அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும். நினைவுப் பிரசுரங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்து எமது துயரில் பங்கேற்ற அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

**சகோதரிகள்,**
**மைத்துனர்கள்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 10 . 04 . 1932



உதிர்வு 28 . 04 . 2020

### நவரத்தினம் செல்வநாயகம் ஹண்ட்

(Health Superintendent, Colombo Municipality Council)

"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் - II தீமோத்தேயு 4:7

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை மற்றும் மொரிஸ் லேன் - சுண்டிக்குளி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் செல்வநாயகம் ஹண்ட் (Health Superintendent, Colombo Municipality Council) கடந்த (28.04.2020) செவ்வாய்க் கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களாகிய திரு.திருமதி நவரத்தினம் ஹண்ட். அமிர்தம்மா (nee சின்னத்தம்பு பிளக்) அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களாகிய திரு.திருமதி K.G.நல்லையா, ஞானம்மா (nee மொரிஸ்) அவர்களின் அன்பு மருமகனும் கேட்ரூட் (Girty) ஞானதேவியின் அருமை கணவரும், காலஞ்சென்ற புளோரா மற்றும் குணராஜா ஹண்ட், செல்வராஜா ஹண்ட், காலஞ்சென்ற ஜெயராஜா ஹண்ட் மற்றும் ரோசம்மா, காலம்சென்ற மகிழ்மம்மா ஹண்ட் ஆகியோரின் அருமை சகோதரனும், காலம்சென்ற சோமசுந்தரம் மற்றும் நான்சி, ஜெயசீலி, காலஞ்சென்ற பாலசந்திரன் மற்றும் கமலாதேவி அருள் நாயகம், மொரிஸ், காலம்சென்ற கிங்ஸ்லி மற்றும் ராஜதேவி (Primy) அந்தோனிப்பிள்ளை, பாலசிங்கம், ராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை கடந்த (28.04.2020) மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பூம்புகார் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஞானதேவி** (Girty)
**மனைவி**

**தொடர்பு:** +94 77 494 9941

### சர்வாதிகார....

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளுக்கு சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், நாடு இராணுவ ஆட்சியை நோக்கிப் பயணிக்கின்றது என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும், இதனை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று மறுத்திருந்தார். இதற்குப் பதில் வழங்கும் போதே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று அவர் தலைமையில் ராஜபக்ஷக்களின் ஆட்சி மீண்டும் வந்தது தொடக்கம் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்குள் முக்கிய உயர் பதவிகளில் அவர்களுக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இது ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சியை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றது. இதை எந்தக்காரணம் கொண்டும் ராஜபக்ஷ அணியினர் மறுக்கவே முடியாது.

சிறுபிள்ளைக்குக் கூட இன்று நாட்டில் நடப்பது ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சி என்பது தெரியும். ஒட்டுமொத்த மக்களையும் அடிமைத்தனத்தில் வைத்திருக்கவே இப்படியான ஆட்சியை ராஜபக்ஷக்கள் முன்னெடுக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 10 வருடங்கள் இந்த நாட்டில் ராஜபக்ஷக்களின் இப்படிப்பட்ட மோசமான ஆட்சி நிலவியது. இதற்கு 2015இல் நடைபெற்ற இரண்டு முக்கிய தேர்தல்களிலும் நாட்டு மக்கள் பதிலடி கொடுத்தார்கள். மக்களின் வாக்குப் பலத்தால் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. அதுபோல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு நாட்டு மக்கள் முடிவு கட்டுவர்.

பாதுகாப்புச் சேவையில் இராணுவத்தின் அர்ப்பணிப்புக்களை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், ராஜபக்ஷக்களின் சர்வாதிகார ஆட்சியில் அவர்களுக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாக சேவையில் உயர் பதவிகளில் அமர்த்துவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். ராஜபக்ஷக்களின் இப்படியான மோசமான செயலால் இராணுவத்தினருக்கு இருக்கின்ற மரியாதை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் எம்மத்தியில் இருக்கின்றது" என்

**நாகபூஷணி திருமண சேவை**

மணமக்கள் அனைவருக்கும்
பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
(13.05 முதல் 15.05 வரை)
நீங்கள் விரும்பும் மணமக்கள்
ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக
உடன் பெற்றுக்கொள்ளலாம்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 021 222 9306, 077 138 7596**

**நீர்க் கசிவைத் தடுப்பதற்கு**
**Water Proofing**

வடக்கில் நீர்க்கசிவைத் தடுப்பதற்கான இரசாயனப் பொருள்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள். உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள், நீர்த்தாங்கிகள், மாடியில் உள்ள குளியல் அறை கள், கோவில் வில்லு மண்டபம், கோபுரங்களுக்கு இடையிலான நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகிறோம்.
**எம்மிடம் இரசாயனப் பொருள்களை விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.**
**North and East Engineering**
**077 5244 177 / 077 2323 000**

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் பொறுப்புத்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**செல்வி சரவணமுத்து சத்தியதேவி**
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சரவணமுத்து தனலக்சுமி

அவர்கள் 05.05.2020 அன்று காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

றார். (கு-22)

### கொரோனா...

கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 863 இலிருந்து 884ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11.55 மணியளவில், சுகாதார அமைச்சால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை 863 இலிருந்து 869 ஆக உயர்ந்திருந்தது. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 6 பேரும் கடற்படையினர் எனவும், அவர்கள் கராப்பிட்டி மருத்துவமனையில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். அதற்கமைய நேற்றுமுன்தினம் கொரோனா வைரஸ் தொற்றிய 6 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்தநிலையில், நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்துக் கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 869 இலிருந்து 884 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்ட 10 பேரில் 09 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 23 பேர் முழுமையாகக் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 343 இலிருந்து 366 ஆக அதிகரித்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 884 பேரில் 09 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 509நோயாளிகள் 07 மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 117 பேர் 26 மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (கு-22)

### இராணுவத்திலும்...

ளார். சுதேச பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் பெருந்தோட்டத் துறைக்கு முக்கியமானதொரு பொறுப்பு உள்ளது. அதனை விளங்கிக்கொண்டு நட்டத்தில் இயங்கும் தோட்டங்களை இலாபமீட்டும் நிலைக்கு விரைவாக முன்னேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறையை முன்னேற்றுவது பற்றி ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் அனைத்து நாடுகளும் பெரும் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்துள்ளன. இறக்குமதியை மட்டுப்படுத்தி சவால்களை முகாமைத்துவம் செய்வதற்கு என்னுடைய அரசுக்கு முடியும்.

பெருந்தோட்டத்துறையினால் உற்பத்தி செய்யமுடியுமான பல விடயங்கள் அநாவசியமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பயிர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பெறுமதி சேர்த்தலின் அடிப்படையில் கறுவா, மிளகு உள்ளிட்ட முக்கிய பெருந்தோட்டப் பயிர்கள் மூலம் அதிக ஏற்றுமதி வருமானத்தை சம்பாதிப்பதற்குத் திட்டமிடுங்கள் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இலக்குடன் செயற்பட்டால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு விரிவானதொரு பங்களிப்பை வழங்கும் இயலுமை பெருந்தோட்டத் துறையிடம் உள்ளது. அனைத்து பெருந்தோட்டப் பயிர்களையும் உயர் நியமங்களுடன் ஏற்றுமதி செய்ய வேண்டும். மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை நட்டமடைவதற்கான காரணத்தை ஆராய்ந்து விரைவில் இலாப மீட்டும் நிலைக்கு கொண்டுவரும் வகையில் பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் வசமுள்ள மர ஏற்றுமதியை முறைப்படுத்துங்கள் என்றும் ஜனாதிபதி பணித்தார். (கு)

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்
02 . 03 . 1938

மறைவு
13 . 04 . 2020

திருமதி

## தனலக்சுமி சுப்பிரமணியம் (பத்மா)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் பம்பலப்பிட்டி, இங்கிலாந்து ஹரோவை வதிவிடமாகக்கொண்ட திருமதி தனலக்சுமி சுப்பிரமணியம் (பத்மா) அவர்கள் 13-04-2020 லண்டனில் சிவபதமெய்தினார். இவர் யாழ்ப்பாணம் வர்த்தகர் அமரர் நல்லதம்பி சுப்பிர மணியம் (பாய்க் கடை, மணிகரன் ஸ்டோர்ஸ், நயினை அமுதசுரபி அன்ன தான சபை ஸ்தாபக உறுப்பினர், யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரிகள் சங்க முன்னாள் தலைவர்) அவர்களின் அன்பு துணைவியார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (20.04.2020) நடைபெற்றதோடு அந்தியேட்டி கிரியை இன்று (13.05.2020) புதன்கிழமை நடைபெறும்.

திருமதி தனலக்சுமி சுப்பிரமணியம் அவர்களின் பிரிவுச் செய்தி கேள்வியுற்று இணையத்தின் வழியும், தொலைபேசியூடாகவும், நேரிலும் ஆறுதல் வார்த்தை களை நகுந்தும் அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்தனைகள் செய்தும் இந்த இடர் சூழ்ந்த நாளில் எம்மோடு துணையாய் இருந்த உங்கள் அனை வருக்கும் நன்றியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

135, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், பூட்டி.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## கிரியைகளும் சேவைகளும்

மரணக் கிரியைகள், அந்தியேட்டி கிரியைகள், வீட்டு சாந்தி கிரியைகள், இதர ஏனைய கிரியைகளுக்கும் எவ்வேளைகளிலும் தொடர்பு கொள்ளுங்கள்.

சிவஸ்ரீ வி.ஆர்.ஈஸ்வரக் குருக்கள்
பருத்தித்துறை
தொலை பேசி: 076 044 1087

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 . 05 . 1935

மறைவு
25 . 04 . 2019

அமரர் **சரவணமுத்து சரஸ்வதி**
திதி : 13.05.2020

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம்வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

மீசாலை. குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் சிவபாக்கியம் இராசையா

மலர்வு
24 . 09 . 1927



உதிர்வு
11 . 04 . 2020



கடந்த (11.04.2020) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி சிவபாக்கியம் இராசையா அவர்களின் நினைவுதினம் இன்று (13.05.2020) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருணம் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
T.P: 021 224 0149

குடும்பத்தினர்
(தம்பி பழக்கடை)

# கொரோனா அச்சத்தால் மைக் பென்ஸ் தனிமை

வொஷிங்டன், மே 13



அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ் கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொண்டார்.

அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்குள் கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதிபர் ட்ரம்பின் பாதுகாப்புப் படைச்சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. துணை அதிபர் மைக் பென்ஸின் உதவியாளருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொண்டார் மைக் பென்ஸ். (ம)

# கொரோனாவால் கல்வித்துறை மிக மோசமாக பாதிக்கப்படும்!

## உலக வங்கி எச்சரிக்கை

வொஷிங்டன், மே 13



**கொரோனாவால் கல்வித்துறை மிக மோசமாகப் பாதிக்கப்படும். எதிர்பாராத வகையில் இந்தப் பாதிப்பு இருக்கும் என்று உலக வங்கியின் கல்வித்துறை நிபுணர்கள் குழு எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்பே, 25 கோடியே 80 லட்சம் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பள்ளியில் சேராமல் இருந்தனர். படிப்பை பாதியில் நிறுத்துபவர்கள் அதிகமாக இருந்தனர். இதனால் கற்றல் குறைபாடு பெருமளவில் காணப்பட்டது.

கொரோனா வைரஸ் வந்த பிறகு, நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. உலகின் ஏறத்தாழ அனைத்து பகுதிகளிலும் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. நம் வாழ்நாளிலேயே கல்வித்துறைக்கு மிகப்பெரிய அதிர்ச்சியைப் பார்த்துவிட்டோம். இந்த சுகாதார நெருக்கடி நிலை நடவடிக்கைகள், உலகளாவிய மந்த நிலையை உண்டாக்கும்போது, இந்தப் பாதிப்பு இன்னும் மோசமாகும்.

இந்தப் பிரச்சினையை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். முதல்கட்டமாக, பள்ளிகளைப் பூட்டி, குழந்தைகளின் உடல்நலத்தைப் பாதுகாத்து விட்டோம். அடுத்தகட்டமாக, பள்ளிகளைத் திறக்க திட்டம் வகுக்க வேண்டும்.

படிப்பை பாதியில் நிறுத்துவதை தடுக்க வேண்டும். குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன், விரைவான கற்றல் திறனுக்காக புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். நீண்டகால பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால், அதை சமாளிக்க தீவிர தன்மையுடைய கொள்கை நடவடிக்கை எடுப்பது அவசியம் - என்றுள்ளது. (ம)



# அதிபரும் ஆசிரியரும்

ஒட்டாவா, மே 13

கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு நிலவும் நிலையில் பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியராக மாறியுள்ளார் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.

இதுகுறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

'வணக்கம் பெற்றோர்களே. ஒருவேளை நீங்கள் உங்கள் குழந்தைகளின் வீட்டுப் பாடக் கேள்விகளால் சிக்கிக் கொண்டீர்களா? நானும் ஒரு ஆசிரியர்தான். நான் உதவ விரும்புகிறேன். எனது பிரத்தியேகத் தளத்தைப் பயன்படுத்தி தெரியப்படுத்துங்கள்' என்று பதிவிட்டுள்ளார். (ம)

# தவறிய குறி: 17 பேர் பலி

தெஹ்ரோன், மே 13

ஈரானிய போர்க் கப்பல் ஒன்று ஏவுகணைப் பயிற்சியின்போது தாக்குதலுக்குள்ளாகியதில் 19 மாலுமிகள் உயிரிழந்தனர்.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள், 'ஈரானின் ஜாஸ்க் துறைமுகத்தில் இருந்த கோனாரக் என்ற ஈரானிய போர்க் கப்பல், ஜமானரன் என்ற மற்றொரு கப்பலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைப் பயிற்சியின்போது தவறுதலாக தாக்குதலுக்குள்ளானது. அதிலிருந்த 19 மாலுமிகள் பலியாகினர். 15 பேர் காயமடைந்தனர். அக்கப்பலை மீட்கச் செல்வதற்கு முன்னே அது முற்றிலும் உருக்குலைந்து மூழ்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.' என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# இயல்புக்கு திரும்பியது நியூசிலாந்து



வெலிங்டன், மே 13

ஊரங்கு உத்தரவை முழுமையாகத் தளர்த்தியது நியூசிலாந்து. இதையடுத்து நாளை முதல் அங்கு பள்ளிகள், திரையங்குகள், வணிக வளாகங்கள் என்பன திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நியூசிலாந்தின் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

ஊரடங்குத் தளர்வு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது. உணவு விடுதிகள், திரையரங்குகள், உடற்பயிற்சி நிலையங்கள் வியாழக்கிழமை (நாளை) முதல் திறக்கப்படவுள்ளன. பாடசாலைகள் அடுத்த வாரம் திறக்கப்படு கின்றது. மதுபான விடுதிகள் மே 21ஆம் திகதி திறக்கப்படும். பொதுமக்கள் 10 பேர் மட்டுமே கூடுவதற்கு அனுமதி அளிக்கப்படும். தொழில் நிறுவனங்களைத் திறப்பதற்கு இன்னும் காலம் இருக்கிறது. விரைவில் பொருளாதாரம் மீட்டெடுக்கப்படும்' என்றார். (ம)

# அமெரிக்காவில் இந்த வாரத்தில் ஒரு கோடி பேருக்குச் சோதனை

வொஷிங்டன், மே 13

அமெரிக்காவில் இந்த வாரம் மட்டும் ஒரு கோடி பேருக்கு கொரோனாச் சோதனைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. மிக விரைவில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சோதனைகள் அவசியமானவை என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் மூன்று வாரங்களுக்கு முன்னர்வரை ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்றை உறுதி செய்வதற்கான பரிசோதனை செய்தோம். ஆனால் இவ்வாரம் ஒரு நாளைக்கு 3 லட்சம் பேருக்கு மருத்துவ பரிசோதனைகளைச் செய்ய இருக்கிறோம். இந்த வார முடிவுக்குள் ஒரு கோடி பேருக்கு கொரோனா மருத்துவப் பரிசோதனை நடத்த உள்ளோம். இது மற்ற நாடுகளை ஒப்பிடும் போது இரு மடங்கு எண்ணிக்கையாகும்- என்றார். (ம)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பொன்னம்பலம் ஜெயசிங்கம்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)



பிறப்பு 11.04.1958 இறப்பு 13.04.2020

எம் உறவோடு கலந்து
வாழ்வோடு பயணித்து
அமரத்துவம் அடைந்த
எமது அப்பாவுக்கு
சமர்ப்பணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

35/5, வில்வம் தெரு,
விபுலாநந்தர் வீதி,
கொழும்புத்துறை.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.